(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2017 மே 03, புதன்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2017 ஏப்ரல் 21, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

---

## 2017 மே 03, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

853/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் தொல்பொருளியல் திணைக்களத்துக்குரிய விகாரைகள் யாவை என்பதையும்;

(ii) பௌத்த அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விகாரைகள் யாவை என்பதையும்;

(iii) இந்த விகாரைகளை புதையல் திருடர்கள் மற்றும்/ அல்லது திட்டமிட்டு இயங்கும் குற்றாவாளிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் , அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) 2012 - 2014 வரையிலான கால கட்டத்தினுள் மேற்குறிப்பிட்ட நபர்களினால் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

929/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு தூதுப் பணிக்கு நியமனம் பெற்ற இராஜதந்திர உத்தியோகத்தர்களுக்கு இலங்கையிலிருந்து சேவை உதவியாளர் பதவிக்கு ஆட்களை அழைத்துச் செல்ல முடியுமென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2005.01.01 தொடக்கம் 2015.01.01 வரையான காலப்பகுதியில் தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் இவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட சேவை உதவியாளர்களின் பெயர்கள், வெளிநாட்டுக் கடவுச் சீட்டு இலக்கங்கள் மற்றும் முகவரிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) ஏற்புடைய கடமைகள் நிறைவடைந்ததன் பின்னர் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை உதவியாளர்கள் இலங்கைக்கு வருகை தந்த திகதிகளும் ஒவ்வொரு சேவை உதவியாளரினதும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு இரத்தாகும் திகதியும் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) உத்தியோகத்தர்கள் இலங்கைக்கு திரும்பி வருகின்றபோது இவர்களுடன் வருகை தராத சேவை உதவியாளர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) இலங்கைக்கு திரும்பாத சேவை உதவியாளர்கள் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

991/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர்கள் அல்லது இணைத் தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர் அல்லாதோர் நியமிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், அவர்கள் தலைவர் பதவியேற்றுள்ள பிரதேச அபிவிருத்திக் குழுக்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி தலைவர்களுக்கான அதிகாரங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஆட்கள் மேற்கூறிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(v) மேற்படி ஆட்களின் அதிகூடிய கல்வித் தகைமைகள் அல்லது தொழிற்தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(vi) மேற்படி தலைவர்களுக்கு/ இணைத் தலைவர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்கள், கொடுப்பனவுகள் மற்றும் வேறு வசதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1014/ ’16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கமத்தொழில் அமைச்சுக்கு வாடகை அடிப்படையில் புதிதாக கட்டிடமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திகதி யாது என்பதையும்;

(iii) அதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்க முன்வந்த ஆட்கள் மற்றும் அவர்கள் சமர்ப்பித்த விலை மனுக்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடத்திற்கான அரசாங்க விலைமதிப்பு, உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி, மாதாந்த வாடகை மற்றும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை யாது என்பதையும்;

(vi) மேற்படி கட்டிடத்திற்காக உரிமையாளருடன் கையொப்பமிடப்பட்ட குத்தகை உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) கமத்தொழில் அமைச்சு மேற்படி கட்டிடத்திற்கு கொண்டு செல்லப்பட்ட திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1110/ ’16

கௌரவ சமிந்த விஜேசிறி,— கைத்தெழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரவெல பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(ii) இவர்களது கல்வித் தகைமைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி கூட்டுறவுச் சங்கத்தின் பிரதேச சங்கங்களில் நட்டத்தில் இயங்குகின்ற மற்றும் இலாபம் ஈட்டுகின்ற பிரதேச சங்கங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) கடந்த நாட்களில் நடைபெற்ற உத்தியோகத்தர் தெரிவு தொடர்பாக ஏதேனும் முறைப்பாடு கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1146/ ’16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று ஓட்டமாவடி மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

1276/ ’16

கௌரவ கஞ்சன விஜேசேகர,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக்கொள்வதிலும் மக்களது போசாக்குத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதிலும் பங்களிப்பை வழங்குகின்ற கடற்றொழிலின் இடையறா இருப்பை ஏற்றுக்கொள்கிறாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மாத்தறை மாவட்டத்தின்,

(i) கடற்றொழில் துறைமுகங்கள், நங்கூரமிடும் தளங்களின் எண்ணிக்கை மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(ii) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள பலநாள் கலங்கள் மற்றும் ஒருநாள் மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் படி, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் வசிக்கின்ற கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை, தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில்,

(i) கடற்றொழில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(ii) மானிய அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பலநாள் கலங்கள் மற்றும் ஒருநாள் கலங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பிரதேச செயலாளர் பிரிவு வாரியாக மானிய அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள மீன்பிடி உபகரணத் தொகுதிகள், செய்திப் பரிமாற்ற இயந்திரங்கள் மற்றும் உயிர் பாதுகாப்பு அங்கிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டின்படி தனித்தியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

8.

1373/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 126 வது இலக்க முன்மொழிவின் பிரகாரம், சிறிய மட்டும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக்காக தனியார் துறையினரின் சிறப்புச் சந்தைகளில் அலுமாரித் தட்டுகளில் இடவசதிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தனியார் துறையினரின் சிறப்புச் சந்தைகளில் மேற்படி அலுமாரித் தட்டுகளில் இடவசதிகளை ஒதுக்கித் தரும்படி ஏதேனும் அமைச்சினால் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அத்தகைய கோரிக்கையோ அல்லது கட்டளையோ விடுக்கப்பட்டிருப்பின், அதன் பிரதியொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இலங்கையில் அமைந்துள்ள வரி அறவிடப்படுகின்ற தனியார்துறை சிறப்புச் சந்தைகளின் எண்ணிக்கையையும் அவை அமைந்துள்ள நகரங்களின்/ கிராமங்களின் பட்டியலொன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 நவெம்பர் 21 ஆம் திகதிய 1994/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 09 ஆம் திகதிய 1996/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 20 ஆம் திகதிய 1998/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 சனவரி 06 ஆம் திகதிய 2000/85 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 சனவரி 18 ஆம் திகதிய 2002/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 சனவரி 27 ஆம் திகதிய 2003/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 16 ஆம் திகதிய 2006/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 23 ஆம் திகதிய 2007/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 9),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 26 ஆம் திகதிய 2007/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி அமைச்சர்,— வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 10),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 07 ஆம் திகதிய 2009/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 1),— 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதி தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2016 திசெம்பர் 02 ஆம் திகதிய 1995/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம் (இல. 2),— 2017.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2017 சனவரி 06 ஆம் திகதிய 2000/86 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 நவெம்பர் 10 ஆம் திகதிய 1992/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை திருத்தப்பட்டு, 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 1999/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 1999/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை திருத்திப்பட்டு, 2017 சனவரி 03 ஆம் திகதிய 2000/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 சனவரி 03 ஆம் திகதிய 2000/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை திருத்தப்பட்டு, 2017 சனவரி 25 ஆம் திகதிய 2003/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

நிதி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பில், நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 நவெம்பர் 11 ஆம் திகதிய 1992/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— கம்பனிகள் சட்டம் மற்றும் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 477 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 527 ஆம் பிரிவின் கீழ் மற்றும் 2005 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சங்கங்கள் (திருத்தம்) கட்டளைசட்டத்துடன் வாசிக்கப்படும் (123 ஆம் அத்தியாயம்) 1891 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் (கட்டணம்) மற்றும் சங்கங்கள் (கட்டணம்) தொடர்பாக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 25 ஆம் திகதிய 1990/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்,— கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1987 செப்டம்பர் 14 ஆம் திகதிய 471/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கம்பனிகள் (செயலாளர்கள் பற்றிய) ஒழுங்குவிதிகளின் 2 (i) (ஆ) பிரிவு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 527 ஆம் பிரிவின் கீழ் திருத்தப்பட்டு, (ix) எனும் புதிய உப பிரிவைச் சேர்த்து கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 திசெம்பர் 20 ஆம் திகதிய 1998/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க இராஜதந்திரச் சிறப்புரிமைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 ஒக்தோபர் 5 ஆம் திகதிய 1987/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ், தேசிய விளையாட்டுக் கழகங்கள் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 ஒற்றோபர் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2017 பெப்புருவரி 13 ஆம் திகதிய 2006/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.04.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் படிகளில் திருத்தம் மேற்கொள்ளல்,—

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 16(1) ஆவது பிரிவினூடாக ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றும் பொருட்டு அந்த ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும் அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாதலாலும்;

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2016.11.24 ஆம் திகதியிலிருந்து சட்டமா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஷிட்டர் ஜெனரல் பதவியை வகித்த ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சரத் ஜயமான்ன அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சரத் ஜயமான்ன அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் செல்லுபடியாகும் வண்ணம் மேலதிக சொலிஷிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு உட்பட சகல படிகள் (தொலைபேசிக் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு தவிர்ந்த) செலுத்துவதற்கும், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்குரித்தான அமைச்சரவைச் செயலாளருக்குரிய கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு என்பவற்றை 2016.11.24 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கமைய, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 16(2) ஆவது பிரிவுக்கமைய, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சரத் ஜயமான்ன அவர்களுக்கு அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

வெளிநாட்டுச் செலாவணி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 24.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிர்வகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017, மார்ச்சு 08) [1].

* 26.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 321 ஆம் பிரிவின் கீழ் கொள்கலத்தின் முழு மொத்த திரண்மத்தைச் சரிபார்த்தல் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 ஓகத்து 11 ஆம் திகதிய 1979/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2017.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 31.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

32.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## 2017 மே 04, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

921/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2011 சனவரி முதல் 2015 சனவரி வரையிலான காலப்பகுதியில் வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சில் இடம்பெற்றுள்ள ஊழல், மோசடி மற்றும் அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்துதல் சம்பந்தமாக அமைச்சு மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு விசாரணையினதும் முன்னேற்றம் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழல் மற்றும் மோசடிகளுடன் அமைச்சின் உத்தியோகத்தர்கள் தொடர்புபட்டுள்ளார்களென இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், இவர்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

992/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் உத்தியோகத்தர் திரு.சம்பத் வேரகொட காலி ரிச்மன்ட் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) இவர் மொரட்டுவ வேல்ஸ் குமர கல்லூரி அதிபராக சேவையாற்றிய காலத்தில் நிதி மோசடி செய்தமை தொடர்பாக நடத்தப்பட்ட புலன்விசாரணை நடவடிக்கைகள் எப்போது நிறைவடைந்தன என்பதையும்;

(iii) அவ்வாறெனின், அந்தப் புலன்விசாரணையின் முடிவுகள் மற்றும் சிபாரிசுகள் யாவை என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு பற்றிய புலனாய்வு ஆணைக்குழு முன்னெடுக்கும் புலன்விசாரணை முடிவடைந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அதன் முடிவுகள் மற்றும் சிபாரிசுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1048/ '16

கௌரவ புத்திக பத்திரண,— மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையில் அமைந்துள்ள செத்சிறிபாய இரண்டாவது கட்டத்தின், புதிய கட்டிடத்தினதும் 'சுகுருபாய' புதிய கட்டிடத்தினதும் ஒரு சதுர அடிக்கான குத்தகைப் பணம் மற்றும் சேவைக் கட்டணம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி கட்டிடங்களில் வாகன தரிப்பிட வசதிகளுக்கு கொடுப்பனவொன்றை மேற்கொள்ள வேண்டுமா என்பதையும்;

(iii) ஆமெனில், குறித்த கட்டணம் ஒவ்வொரு கட்டிடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கட்டணத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1075/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதும் தபால் திணைக்களத்திற்கு சொந்தமான 3410 உப தபால் அலுவலகங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அலுவலகங்களுக்கான கட்டிடங்களைத் தேடுதல் உப தபால் நிலைய பொறுப்பதிகாரிகளாலேயே மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதையும்;

(iii) உப தபால் அலுவலகமொன்றை கொண்டுநடத்துவதற்கு மாதாந்த வாடகையாக உப தபால் அலுவலக பொறுப்பதிகாரியொருவருக்கு ரூபா 250/- மட்டுமே செலுத்தப்படுகின்றதென்பதையும்;

(iv) இத்தகைய சிறு தொகையான மாதாந்த வாடகைக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற முடியாமையால் பெரும்பாலான உப தபால் அலுவலக பொறுப்பதிகாரிகளுக்கு தமது சம்பளத்திலிருந்து பெருந்தொகை பணத்தை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளதென்பதையும்;

(v) பெறப்பட்டுள்ள சில கட்டிடங்களில் மலசலகூட (துப்புரவேற்பாட்டு) வசதிகள்கூட இன்மையால் ஊழியர்கள் மிகவும் இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றுகின்றனர் என்பதையும்;

(vi) தமது ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்காக வருகை தரும் முதியோர்களான ஓய்வுபெற்றோருக்கு அமர்வதற்கோ அல்லது நிற்பதற்கோ போதுமான இடவசதி இல்லாத உப தபால் அலுவலகங்கள் காணப்படுகின்றனவென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிலைமைகளை கருத்திற்கொண்டு ஊழியர்களுக்கும் மக்களுக்கும் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் உப தபால் அலுவலகங்களுக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) கட்டிட வசதிகளை பெற்றுக்கொடுக்கும் வரையில் தற்சமயம் செலுத்தப்படும் ரூபா 250/- மாதாந்த வாடகைக்கு பதிலாக போதியளவு வாடகைத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1143/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று வாகரை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோகபூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

1242/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1279/ ’16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தமது குடியிருப்புக்காக அல்லது பயிர்ச் செய்கைக்காக அல்லது வர்த்தக நடவடிக்கைகளுக்காக மரபுரிமைக் காணிகளைக் கொண்டிருக்காத மக்கள் அரசுக்குச் சொந்தமான காணிகளைத் தமது பயன்பாட்டுக்காக அனுமதியின்றி பயன்படுத்துகின்றனர் என்பதையும்;

(ii) காலப் போக்கில் அவ்வாறு அனுமதியின்றி பயன்படுத்தப்படுகின்ற காணிகளை அரச உரிமையிலிருந்து அகற்றி, முறைசார்ந்த விதத்தில் கையளிக்கும் நடைமுறையொன்று ஒவ்வொரு அரசாங்கத்தினாலும் பேணிவரப்பட்டது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை மாத்தறை மாவட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள உறுதிகள், அளிப்புப் பத்திரங்கள், உரித்துப் பத்திரங்கள் அல்லது உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையானது மாத்தறை மாவட்டத்தின் பிரதேச செயலாளர் பிரிவு மட்டங்களில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மாத்தறை மாவட்டத்தில் அரச காணிகளை அனுமதியின்றிப் பயன்படுத்துகின்ற, இருப்பினும், எதுவித சட்ட ரீதியான ஆவணத்தையும் கொண்டிராத ஆட்களின் எண்ணிக்கை, பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு அளிப்புப் பத்திரத்தை அல்லது ஆகக் குறைந்தது உரிமப் பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1322/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்க காலத்தில் பிரதேச செயலகங்கள் ஊடாக செயற்படுத்தப்பட்ட சிறிய அளவிலான அபிவிருத்தித்திட்ட ஒப்பந்தங்கள், மதிப்பீட்டுத் தொகைக்கு, ஏற்புடைய பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் இயங்கும் சங்கங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) இருந்த போதிலும், தற்போது மேலே குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டு ஆகக்குறைந்த கேள்விப்பத்திரத்துக்கு மேற்படி ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) இவ்வாறு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு ஆகக்குறைந்த கேள்விப் பத்திரத்துக்கு மேற்படி அபிவிருத்தி திட்ட ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதால் பிரதேசத்தில் இயங்கிய சங்கங்களுக்கு மேற்படி ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் அத்தகைய சங்கங்களும் அப் பிரதேசமும் நலன்களை இழந்துள்ளனவென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iv) மேலே குறிப்பிட்ட சங்கங்களுக்கு நேர்ந்துள்ள அநீதியிலிருந்து இவர்களை மீட்டெடுப்பதற்காக, முன்னர் காணப்பட்டதை போன்று திறந்த கேள்விப்பத்திரங்கள் கோரலின்றி சிறிய அளவிலான ஒப்பந்தங்களை மதிப்பீட்டுத் தொகைக்கு மேற்படி சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1519/ ' 17

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டு ரூபா 25 மில்லியன் நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொடுக்கும் (விசேட) திட்டத்தின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்திற்கு எவ்வளவு நிதி கிடைத்தது என்பதையும்;

(ii) மேற்படி நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி திட்டத்தின் கீழ் சுயதொழில்முயற்சியாளர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டு தற்போது பிரதேச செயலகங்களில் எஞ்சியுள்ள பொருட்களின் அளவுகள் மற்றும் அவற்றின் பெறுமதி, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் அமைய தனித்தனியே யாது என்பதையும்;

(iv) சுயதொழில்முயற்சியாளர்கள் துலானே அபிவிருத்தி அலுவலரினாலேயே சிபாரிசு செய்யப்பட்டனர் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(v) எஞ்சியுள்ள பொருட்களை சுயதொழில்முயற்சியாளர்களுக்கு விநியோகித்து முடிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1144/ ’16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப் பரப்பளவு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

1243/’ 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கி.மீ. அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1296/' 16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பணியாற்றுகின்ற கல்வி நிருவாக உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கையானது ஒவ்வொரு கல்வி வலயத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மாத்தறை மாவட்டத்தின் வலயக் கல்வி காரியாலயங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) கல்வி நிருவாக உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவுமெனில், அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு பின்பற்றப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தின் பொருட்டு ஓய்வுபெற்ற கல்வி நிருவாக உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) இவர்கள் ஆட்சேர்பபுச் செய்யப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1444/ '16

கௌரவ புத்திக பத்திரன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மாநாட்டு மண்டபத்தை நிர்மாணிக்கச் செலவான பணத் தொகை யாதென்பதையும்;

(ii) அதற்கென பணத்தைப் பெற்றுக்கொண்ட மூலங்கள் யாவை என்பதையும்;

(iii) 2015.01.01 தொடக்கம் 2016.12.31 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மாநாட்டு மண்டபம் ஈட்டிய வருமானம் யாதென்பதையும்;

(iv) இதன் நிர்வாக நடவடிக்கைகள் எந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படுகின்றன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென அரசாங்கம் தொடர்ந்தும் பணத்தை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்விதத்தில் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1244/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) இன்றளவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் யுத்த நிலைமை முடிவடையும் வரை குடிநீர் வழங்குவதற்காக ஒவ்வோர் ஆண்டிற்கும் அரசாங்கம் ஒதுக்கிய மொத்தப் பணத்தொகை யாது;

(iv) யுத்த நிலைமை முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை குடிநீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக அரசாங்கம் ஒதுக்கிய மொத்த பணத்தொகை ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1448/ ’16

கௌரவ புத்திக பத்திரன,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) றாகம நகரத்தை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிட உத்தேசித்துள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) றாகம நகர அபிவிருத்தியின் போது நகரத்திற்கு இணைக்கப்படும் புதிய அம்சங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கென கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது எத்தேதியில் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2017 மே 05, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

807/ ' 16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வெடிக்கச் செய்யும் நடவடிக்கைகளின்போது, அம்பாந்தோட்டை, மாகம் வீதி, 24/5 ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கின்ற திருமதி ஏ.டபிள்யு. உம்மு சலீமா மற்றும் அவரின் வயோதிப கணவர் வசித்துவந்த வீட்டுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இது பற்றி இலங்கை துறைமுக அதிகார சபைக்கும் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளருக்கும் அறிவித்த பின்னர், இடம்பெற்றுள்ள சேதத்தை ஏற்றுக் கொண்டு, சேதமடைந்துள்ள வீடு மற்றும் காணிக்கு நட்டஈடு பெற்றுத் தருவதாகக் கூறி, தாமதிக்காது அவ்வீட்டிலிருந்து வெளியேறுமாறும், நட்டஈடு வழங்கும் வரை, வாடகை வீட்டுக்கு மாதாந்தம் வாடகையைப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்ததற்கு அமைய இவர்கள் அவ்வீட்டிலிருந்து வெளியேறி வாடகை வீட்டில் குடியமர்ந்துள்ளார்கள் என்பதையும்;

(iii) மாதாந்தம் வழங்குவதாக வாக்குறுதியளித்த வாடகையைப் பல தடவைகள் கோரிய பின்னர், அதிகார சபையானது 6 மாதங்களுக்கான வாடகையை ஒரே தடவையில் செலுத்தியதுடன், தற்போது கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) நட்டஈடு செலுத்தும் வரை இணங்கிய மாதாந்த வாடகையை, நிலுவை வாடகையுடன் செலுத்தும் திகதி யாது என்பதையும்;

(ii) இழந்துள்ள காணி மற்றும் வீட்டுக்கு நட்டஈடு செலுத்தப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

854/ '16

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில், தெனியாய வீச்சிடைக்குச் சொந்தமான பட்னா வனத்திற்கு அனுமதியின்றி விஹாரஹேன பாதையின் ஊடாக வெளிநாட்டவர்கள் அழைத்துச்செல்லப்பட்டு நீரோடைக்கு அருகாமையால் வனத்திற்குள் பிரவேசிப்பதையும்;

(ii) சிங்கராஜ வனத்தை பார்வையிடுவதற்காக வன பரிபாலனத் திணைக்களத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ள பிட்டதெனிய நுழைவாயிலை இவர்கள் பயன்படுத்துவதில்லையென்பதையும்;

(iii) சிங்கராஜ வனத்தை அண்டியதாக, மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டல்களில் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகளே இவ்வாறு பிரவேசிக்கின்றனர் என்பதையும்;

(iv) இந்த நுழைவாயிலின் ஊடாக வனத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம் சிங்கராஜ வனத்தின் உயிரியல் பல்வகைமை பாதிக்கப்படல் மற்றும் மரபணு கொள்ளை ஆகியவற்றுக்கு பாதிப்பேற்படும் என்பதையும்;

(v) இதனூடாக அரசாங்கத்திற்கு பாரிய நிதிசார் நட்டம் ஏற்படுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சிங்கராஜ வனத்திற்கு சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரிப்பாரா;

(ii) ஆமெனில், அது எத் திகதியிலிருந்து;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மாத்தறை மாவட்டத்தில், சிங்கராஜ வனத்தை அண்டியதாக அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டல்களினால் வனத்தினுள் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதாக அல்லது நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

1045/16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டத்தின் படி, உள்ளூராட்சித் தொகுதி எல்லைகள் தொடர்பான மேன்முறையீடுகளை ஆராய்வதற்காக மேன்முறையீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், இக்குழுவினால் 2016 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மேன்முறையீடுகளை ஆராய்ந்து முடிவுறுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(iv) மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இதுவரை தேர்தல் நடத்தப்படாதிருப்பது ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1253/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்களும் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1297/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் தர நிலைப்படுத்தப்பட்ட அதிபர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி எண்ணிக்கை ஒவ்வொரு தரத்துக்கும் அமைவாக வெவ்வேறாக யாது;

(iii) மாத்தறை மாவட்டத்தின் தேசிய அல்லது மாகாண பாடசாலைகளில் தரநிலைப்படுத்தப்படாத ஆட்கள் அதிபர் பதவிகளை வகிக்கின்றார்களா;

(iv) ஆமெனில், அப்பாடசாலைகள் யாவை;

(v) அதிபர் தரத்தைப் பெற்றுள்ளபோதிலும், அதிபர் பதவியைப் பெறாது மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் ஆட்களின் எண்ணிக்கை யாது;

(vi) மேலே (v) இன் பொருட்டு இனங்காணப்பட்டுள்ள காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1312/ ' 16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாது என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்கள் அரசாங்க காணிகளை அளிப்புப் பத்திரத்தின்/அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு இற்றைவரை அளிப்புப் பத்திரத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1344/ ' 16

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெரிவான உள்ளூரதிகார சபைகள் கலைக்கப்பட்டதிலிருந்து நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கைக்கு புறம்பாக 2015.05.15 ஆந் திகதி ஏறாவூர் நகர சபைக்கும் காத்தான்குடி நகர சபைக்கும் கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்கும் நியமிக்கப்பட்ட மேலதிகமான தற்காலிக ஊழியர்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) கிழக்கு மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சரின் விதப்புரைக்கிணங்க வழங்கப்பட்ட அத்தகைய நியமனங்களின் எண்ணிக்கையையும்;

(iii) அத்தகைய நியமனங்களுக்கு ஊதியமளிக்க உள்ளூரதிகார சபைகள் ஒவ்வொன்றுக்கும் போதிய நிதி உள்ளதா என்பதையும்;

(iv) அத்தகைய தற்காலிக ஊழியர்களின் சேவையின் தன்மையையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அத்தகைய நியமனங்கள் ஒவ்வொரு உள்ளூரதிகார சபையின் தேவைகளுக்கிணங்க இருக்கின்றனவா என்பதையும்;

(ii) அது அதிக பணியாட்டொகுதியையும் நிதியியல் வரையறைகளையும் ஏற்படுத்தியுள்ளதா என்பதையும் அவ்வாறெனில் ஏன் என்பதையும்;

(iii) ஏதேனும் அத்தகைய தற்காலிக ஊழியர்களுக்கு தற்போது குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறதா அல்லது ஊதியம் வழங்கப்படாமல் இருக்கிறதா என்பதையும் அவ்வாறெனில் ஏன் என்பதையும்;

(iv) இந்த தற்காலிக ஊழியர்களை உள்வாங்க பதவியணியின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

1370/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின்படி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறையை ஒழுங்குமுறையாக்குவதற்கு தேவையான “ஒழுங்குமுறையாக்கல் அதிகாரசபை“ ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) இலங்கையில் நுண் நிதி நிறுவனங்களை பதிவு செய்யும்போது ரூபா 25,000/- கட்டணமொன்றைச் செலுத்த வேண்டுமா என்பதையும்;

(iv) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கு ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அக்குழுவின் உறுப்பினர்கள் யாவர் என்பதையும்;

(vi) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடன் பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில், அரசாங்கம் ரூபா 500 மில்லியன் தொகை ஆரம்ப நிதியத்தை வழங்கியதா என்பதையும்;

(vii) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைக்கு சலுகை வட்டிவீதத்தின் கீழ் நிதி வசதிகளை வழங்குவதற்கான உதவியாக ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியன் கடன் வசதி கிடைத்துள்ளதா என்பதையும்;

(viii) ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வசதியின் கீழ், கடன் வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அடங்கிய பட்டியலைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1541/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்ட மக்களுக்கு தற்போது ஏதேனும் நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நட்டஈடு பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) இன்றேல், நட்டஈடு வழங்கலை துரிதப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1047/ ' 16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.10 முதல் 2016.10.31 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தினுள் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு விஜயத்தின் நோக்கம், விஜயம் மேற்கொண்ட நாடுகள் மற்றும் ஒவ்வொரு விஜயத்திற்கும் செலவாகிய பணத்தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி விஜயங்களின் பெறுபேறாக இலங்கையின் நற்பெயருக்கு சாதகமான பலன் கிடைத்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

11.

1053/ ' 16

கௌரவ புத்திக பத்திரண,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காட்டு யானைகளைக் கொலை செய்பவர்களுக்கு எதிராக வழங்கப்படுகின்ற தண்டனை போதுமானதல்ல என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) காட்டு யானைகள் சொத்துக்களுக்கு ஏற்படுத்துகின்ற சேதங்களுக்காக உரிய ஆட்களுக்குச் செலுத்தப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை போதுமானதல்ல என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நட்டஈட்டுத் தொகையை அதிகரிக்கச்செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை - மனித மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1254/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்களும் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1299/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய மற்றும் மாகாண,

(i) பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலையின் பிரகாரம் எத்தனையென்பதையும்;

(iii) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்தின் பிரகாரம் எத்தனையென்பதையும்;

(iv) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வலயத்திற்கேற்ப எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கையானது தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையிலான விகிதம் ஒவ்வொரு பாடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதமானது கல்வி வலயத்திற்கேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1313/ ' 16

கௌரவ எம்.எச் எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்கள் அரசாங்க காணிகளை அளிப்புப் பத்திரத்தின்/அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு இற்றைவரை அளிப்புப் பத்திரத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1543/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உமா ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பதுளை மாவட்ட மக்களின் வீடுகளுக்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளமையை அறிவாரா;

(ii) வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுவாரியாக வெவ்வேறாக யாவை;

(iii) வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ள ஆட்களினது வீடுகளை திருத்திக் கொடுப்பதற்கு அல்லது மீள நிர்மாணித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், இது பற்றிய விபரங்களை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 மே 23, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

855/ '16

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஜாஎல பிரதேச செயலாளர் பிரிவில் 181F கெட்டகெவத்த கிராம உத்தியோகத்தர் பிரிவின், இஹலகம கிராமத்தில் அமைந்துள்ள பொல்கஹ குளம் (இஹலகம) உரிய முறையில் பராமரிக்கப்படாத காரணத்தினால் அழிவுறும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதையும்;

(ii) சில ஒழுங்கமையப்பெற்ற குழுக்கள் குளத்தை மண்ணிட்டு நிரப்புவதற்கும் குளத்துக்குரிய ஒதுக்குக் காணிகளை கைப்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்து வருவதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இஹலகம குளத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) குளத்தை புனரமைப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சட்ட விரோதமான முறையில் குளத்தை மண்ணிட்டு நிரப்புதல் மற்றும் குளத்துக்குரிய காணிகளைச் சுவீகரித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) குளத்தின் சில பகுதிகளை மண்ணிட்டு நிரப்பி கொகிலை பயிரிட்டுள்ள பிரதேசங்களை மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) அவ்வாறு கொகிலைச் செய்கையை மேற்கொண்டுள்ள ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1007/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கதிர்காமம் புனித நகரத்தில், பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படும் "ஒசு உயன" (ஔடதப் பூங்கா) என அழைக்கப்படும் காணியில், சுமார் முப்பது ஏக்கர் பகுதி, இராணுவத்தினரையும் ஈடுபடுத்தி, மூலிகைச் செடிகள் அழிக்கப்பட்டு 2016 யூலை மாதத்தில் துப்பரவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதற்கு எதிராக பௌத்த பிக்குமார் மற்றும் பிரதேச மக்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள் என்பதையும்;

(iii) எஸ்ஈஐ/289/465 ஆம் இலக்க, 1990.01.30 ஆந் திகதிய கடிதத்தின் வாயிலாக குறிப்பிட்ட காணியை, சனாதிபதி அவர்கள் தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களத்துக்கு கையளித்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பதையும்;

(ii) இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட அழிவானது, குறிப்பிட்ட இடத்தில் இந்தியாவின் திருப்பதிக் கோவிலின் கிளையொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iv) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளுக்கு அமைச்சின் கீழ் உள்ள நிறுவனமொன்றிலிருந்து அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1102/ '16

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்/நாவற்கேணி கண்ணகி வித்தியாலய ஆசிரியை திருமதி நளினகாந்தி விமலேந்திரன் அவரது பயிற்சியை மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 2008 இல் பூர்த்தி செய்ததும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கைவேலி கணேசா வித்தியாலத்திற்கு நியமனம் செய்யப்பட்டார் என்பதையும்;

(ii) மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் 2009 ஏப்ரல் மாதம் நடைபெற்ற இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அவர் கோரப்பட்டார் என்பதையும்;

(iii) அக்கால கட்டத்தில் யுத்தம் உச்ச கட்டத்தினை அடைந்திருந்த காரணத்தினால் முல்லைத்தீவினை விட்டுச் செல்ல யாரும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும்;

(iv) தனது கனிஷ்ட தொகுதியினருடன் பரீட்சைக்குத் தோற்றிய அவரின் சான்றிதழின் செயற்படும் திகதி 01.01.2011 என வழங்கப்பட்டுள்ள அதேவேளை கனிஷ்ட தொகுதியினருக்கு இது 01.08.2009 என வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) இந்த அநீதியினைப் பற்றி ஜனாதிபதிக்கு இவர் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் SL/EDU/APP/0043 இலக்கமுடைய 2016.08.01 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தினை இந்த ஒழுங்கீனத்தை நிவர்த்தி செய்யுமாறு கோரி அப்போதைய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்திருந்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவரது சான்றிதழின் செயற்படும் திகதியை 01.08.2009 என மாற்றுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(இ) இன்றேல் ஏன்?

4.

1128/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— மகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேல் மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) விஜயம் செய்த நாடுகளும் அவ்விஜயங்களுக்காக செலவிடப்பட்ட பணத் தொகையும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட விஜயங்களின் நோக்கங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) குறிப்பிட்ட வெளிநாட்டு விஜயங்களின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் தொடர்பாக அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1132/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) டாக்டர் நெவில் பர்னாந்து முதலீட்டுத் தனியார் கம்பெனிக்கு உயர்கல்வி நிறுவனமொன்றை ஆரம்பிக்க இலங்கை முதலீட்டுச்சபை அனுமதி வழங்கியுள்ளதா;

(ii) ஆமெனில், அது எத்தகைய பட்டங்களை வழங்குவதற்காக;

(iii) அந்நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட திகதி யாது;

(iv) அந்த உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா;

(v) இலங்கையினுள் தாதியர் பட்டம் மற்றும் சுகாதார விஞ்ஞான பட்டத்தை வழங்குவதற்கான அங்கீகாரம் அளிக்கையில் சுகாதார அமைச்சின் முன்னனுமதி பெறப்படல் வேண்டுமென்ற நிபந்தனையை மேற்சொல்லப்பட்ட கம்பெனி நிறைவேற்றி உள்ளதா;

(vi) ஆமெனில், சுகாதார அமைச்சின் மேற்படி அனுமதி வழங்கப்பட்ட கடிதத்தை சபையில் சமர்ப்பிப்பாரா;

(vii) இன்றேல், முதலீட்டுச் சபையுடனான இணக்கப்பாட்டினை மீறிய அக்கம்பெனிக்கு எதிராக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1147/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவு தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அப் பிரதேச செயலாளர் பிரிவின் மூலம் உள்ளடக்கப்படும் மொத்த நிலப்பரப்பு எவ்வளவு என்பதையும்;

(iv) அதிலுள்ள கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(v) அக்கிராம அலுவலர் பிரிவுகளின் உத்தியோகபூர்வ இலக்கங்களும் பெயர்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அப் பிரதேச செயலாளர் பிரிவைத் தாபிக்கும்போது உத்தியோக பூர்வமாக எல்லைகளை நிர்ணயித்தல் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அப் பிரதேச செயலகத்திற்குரிய கிராம அலுவலர் பிரிவுகளில் ஏதேனும் பிரிவின்/பிரிவுகளின் நிருவாக நடவடிக்கைகள் அல்லது தொழிற்பாடுகள் வேறு பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்கிராம அலுவலர் பிரிவுகளின் பெயர்கள், உத்தியோகபூர்வ இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

1255/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்களும் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1300/ '16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் அரசாங்க கள உத்தியோகத்தர்களுக்கு சலுகை அடிப்படையில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதை அறிவாரா;

(ii) இதன் கீழ் மாத்தறை மாவட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை இவர்களின் தொழில் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) ஒரு மோட்டார் சைக்கிளுக்கான ஏற்டைய உத்தியோகத்தரின் நிதிப் பங்களிப்பும் அரச பங்களிப்பும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பங்களிப்புத் தொகை மீள செலுத்தப்படுமெனவும் சகல அரச ஊழியர்களுக்கும் இலவசமாக மோட்டார் சைக்கிள் வழங்கப்படுமெனவும் தற்போதைய அரசாங்கம் வாக்குறுதி அளித்ததென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மீள செலுத்தப்பட்ட பணத்தைப் பெற்றுக் கொண்ட அரச ஊழியர்களின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தின் பூரண அனுசரணையுடன் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட அரச ஊழியர்களின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் பெறுவதற்கு உரித்துடைய எஞ்சிய அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) இவர்களுக்கு இலவசமாக மோட்டார் சைக்கிள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1375/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தில் 129 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் அரச மற்றும் தனியார் துறையின் சிறந்த ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக ரூபா 1000 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கமத்தொழில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மேற்படி ரூபா 1000 மில்லியன் பயன்படுத்தப்பட்ட விதம் யாதென்பதையும்;

(iii) வரவு செலவு திட்ட முன்மொழிவின் ஊடாக ஒதுக்கப்பட்ட மேற்படி ரூபா 1000 மில்லியன் நிதி வளங்களின் பயனாளிகளின் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1538/17

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்பட்டு வருகின்ற பாடசாலைகளுக்கு தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்கு நியமனம் பெற்ற பின்னர், இற்றைவரை வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் நியமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவ்வாறு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் இணைக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1558/ ’17

கௌரவ கனக ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் சபரகமுவ மாகாணத்தின், தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு இடர் கடன் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி மொத்த பணத்தொகையும் குறித்த ஆண்டில் மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கேகாலை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடுகள் கேகாலை, மாவனெல்லை மற்றும் தெஹியோவிட்ட கல்வி வலயங்களுக்கு வழங்கப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒவ்வொரு வலயத்திற்கும் வழங்கப்பட்ட பணத் தொகை தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கேகாலை, மாவனெல்லை மற்றும் தெஹியோவிட்ட வலயங்களில்,

(i) கடனுக்காக விண்ணப்பித்துள்ள தேசிய பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(ii) இடர் கடன் செலுத்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(iii) செலுத்தப்பட்டுள்ள கடன் தொகைகளின் பெறுமதி;

ஒவ்வொரு கல்வி வலயத்தின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விண்ணப்பித்துள்ள போதிலும் இடர் கடன் கிடைக்காத ஆசிரியர்களுக்கு மேற்படி கடன் தொகையைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அதற்காக அலுவலகங்களுக்கு கட்டுநிதியை விடுவிப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

12.

856/ '16

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில், அக்குரஸ்ஸ, கொடபிட்டிய தேசிய பாடசாலைக்கு 2016 ஆம் ஆண்டுக்காக 6ஆம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கின்ற போது முறைகேடு இடம்பெற்றுள்ளது என்பதையும்;

(ii) இதன் காரணமாக சில மாணவர்களுக்கு அநீதி நேர்ந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டுக்காக, கொடபிட்டிய தேசிய பாடசாலையின் 6ஆம் தரத்துக்கு ஏனைய பாடசாலைகளிலிருந்து அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட முறையியல், ஒவ்வொரு மாணவருக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய ஒரு பட்டியல் அதிபரினால் கல்வி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த பட்டியலுக்கு அமைச்சின் விதப்புரை கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இது தொடர்பில் விசாரணையொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த திகதி யாது என்பதையும்;

(iii) அநீதி இழைக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

1256/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் புத்தளம் மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்களும் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1301/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நடப்பு அரசாங்கத்தின் "100 நாள்" வேலைத்திட்டத்திற்கு நேரொத்த வகையில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவாக அரச வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை மீட்டுகின்றபோது அறவிடப்படுகின்ற வட்டித் தொகை வெட்டிவிடப்படுமென வழங்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தங்க நகைகளை மீட்டியுள்ள மாத்தறை மாவட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இதற்கான அரசாங்க நிவாரணத்தின் நிதிப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையானது மாத்தறை மாவட்டத்தில் இயங்கி வருகின்ற ஒவ்வொரு அரச வங்கியின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2013 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை தங்க நகைகளுக்கான வட்டி வீதமானது ஒவ்வொரு வருடத்திற்கேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த சனாதிபதித் தேர்தலின்போது விளம்பரத் தொனிப்பொருளாக அமைத்துக் கொள்ளப்பட்ட தங்க நகைகளை அடகுவைத்தல் என்பது வெறுமனே விளம்பரக் கருத்திட்டத்திற்கு அப்பால் செல்லவில்லையென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) வாக்குறுதியளிக்கப்பட்டவாறு அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளை மீட்டுகின்றபோது வட்டிச் சலுகைகளை உடனடியாகப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1399/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தின் 171 ஆம் முன்மொழிவின் பிரகாரம், கிராமியப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்துக்காக, ஒரு கிராமத்துக்கு ரூபா 1.5 மில்லியன் வரையில், ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட, ரூபா 21,000 மில்லியன் நிதி ஏற்பாடு 2016 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் குறிப்பிட்ட ஒவ்வொரு கிராமத்திலும் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள் பற்றிய விபரமான பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(ii) மேற்படி 14022 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மேற்குறிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்திய அதிகாரம்பெற்ற நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட அதிகாரிகள் இக்கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொண்டுள்ள நிதித்தொகையைக் காட்டும் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் பிரகாரம், ஒரு கிராமத்துக்கு ரூபா 1.5 மில்லியன் வீதமான நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்ளாத அல்லது அதில் ஒரு பகுதியை மாத்திரம் பெற்றுக்கொண்ட கிராம அலுவலர் பிரிவுகளின் பட்டியலை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 மே 24, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

860/ '16

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள்அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை இராணுவத்தின் 06 ஆம் பீரங்கிப் படையணியில் 65954 ஆம் இலக்கத்தின் கீழ் பணியாற்றும் திக் எல்ல லேகம்கே சமித் அஞ்சுல குமார லேகம்கே எனும் உத்தியோகத்தர் இராணுவ ஒழுக்க விதிகளை மீறியுள்ளார் என்பதையும்;

(ii) இவர் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக பாதிக்கப்பட்ட இவரது மனைவியான ஸ்ரீமாலி லசந்திகா நவரத்ன என்பவருக்கு அநீதி ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தர் சம்பந்தமாக விசாரணையொன்று நடத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எப்போதிருந்து என்பதையும்;

(iii) ஸ்ரீ மாலி லசந்திகா நவரத்ன என்பவருக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக அவருக்கு நிவாரணம் பெற்றுக்கொடுப்பதற்கு இராணுவம் தலையிடுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1163/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி கங்கையின் மினிப்பே அணைக்கட்டின் உயரத்தை 12 அடிகளால் உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றதென்பதையும்;

(ii) இதன் காரணமாக சேருவில, மூதூர் மற்றும் வெருகல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 22,500 ஏக்கர் காணிகள் நீர் கிடைக்காமையால் தாக்கத்துக்கு உள்ளாவதோடு, ஏறக்குறைய 80,000 கமக்காரர்கள் பாதிக்கப்படுவர் என்பதையும்;

(iii) இதற்கு முன்னர் இந்த அணைக்கட்டின் உயரம் 3 மீற்றர்களால் உயர்த்தப்பட்டதன் காரணமாக சேருவில, மூதூர், விஜிதபுர மற்றும் வெருகல் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கமக்காரர்களுக்கு இரண்டு போகங்களிலும் பயிர்செய்ய இயலாமல் போயுள்ளதென்பதையும்;

(iv) அணைக்கட்டின் உயரத்தை 12 அடிகளால் உயர்த்துவதன் மூலம் அப்பிரதேச மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகின்றதென்பதையும்;

(v) மேற்படி விடயம் சம்பந்தமாக 2016.09.04 ஆந் திகதி திருகோணமலை நகரசபை மண்டபத்தில் 42 கமக்காரர் அமைப்புகள் ஒன்றுசேர்ந்து ஊடக சந்திப்பொன்றினை நடத்தியுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவ்விதமாக கமக்காரர்கள் பாதிக்கப்படுவார்களாயின், நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் எடுக்க எதிர்பார்க்கின்ற நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1257/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்களும் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1302/ '16

கௌரவ டளஸ் அழஹப்பெரும,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான வீதிகளின் கிலோ மீற்றர் அளவு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அமைய தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி அளவானது, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தரப்படுத்தல்களுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

(iii) 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் காப்பட் இடப்பட்ட தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான மாத்தறை மாவட்டத்தின் வீதிகளின் கிலோ மீற்றர் அளவு ஆண்டுகளின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) தென் மாகாண சபைக்கு உரித்தான வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், பராமரிப்பதற்கும் நிதி ஏற்பாடுகளை வழங்குகின்ற மூலங்கள் யாவை என்பதையும்;

(v) 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் மேற்படி மூலங்களின் கீழ் மாத்தறை மாவட்டத்தில் மாகாண வீதிகளின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட பணத் தொகை ஒவ்வொரு மூலத்துக்கும் அமைய தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1314/ ’16

கௌரவ எம்.எச் எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்கள் அரசாங்க காணிகளை அளிப்புப் பத்திரத்தின்/அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு இற்றைவரை அளிப்புப் பத்திரத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1338/ ’16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கஹல்ல வன ஒதுக்கத்திலுள்ள ஊடுருவல் தாவரங்களை அகற்றி இயற்கை வன வளர்ப்பினை மேற்கொள்வதற்கும் அங்குள்ள புராதன வாவிகளை மறுசீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

(iii) அப்பணியை நிறைவுசெய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

(iv) அதற்கு ஊழியப் பங்களிப்பினை வழங்குவதற்கு பிரதேசத்திலுள்ள தன்னார்வ அமைப்புகள் இணக்கம் தெரிவித்துள்ளனவா என்பதையும்;

(v) அதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1372/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட முன்மொழிவு இலக்கம் 124 இற்கு அமைய, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் முயற்சி மூலதனத்தை அளிக்கும் நோக்கத்தில், “நிதியங்களின் நிதியமொன்று” தாபிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி “நிதியங்களின் நிதியத்திற்கு” பங்களிப்பு செய்யுமாறு சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்திடமும் (IFC) ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும் (ADB) வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு கிடைத்த பிரதிபலிப்புகள் யாவை என்பதையும்;

(iv) தொழில்முயற்சி மூலதன கம்பனிகளுக்கான கம்பனி வருமான வரியை 50% ஆல் குறைப்பதற்கு ஏற்புடையதாக உண்ணாட்டரசிறைச் சட்டம் திருத்தப்பட்டதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1559/ ' 17

கௌரவ கனக ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டுக்காக பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத் தொகை யாது என்பதையும்;

(ii) ஆரம்பப் பிரிவின் (தரம் 1 - 5 வரை) மாணவர் ஒருவருக்கு சீருடைக்காக வழங்கப்படுகின்ற பணத் தொகை யாது என்பதையும்;

(iii) இரண்டாம்நிலைப் பிரிவின் (தரம் 6 - 13 வரை) மாணவர் ஒருவருக்கு சீருடைக்காக வழங்கப்படுகின்ற பணத் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வழங்கப்படுகின்ற பணத் தொகை சீருடைக்கான துணியைப் பெற்றுக்கொள்ள போதுமானதல்ல என்பதையும்;

(ii) சீருடைத் துணிகளை பாடசாலை மட்டத்தில் வழங்காது கூப்பன் ஒன்று வழங்கப்படுவதன் மூலம் துணியைப் பெற்றுக்கொள்வதற்காக மேலதிக பணத் தொகையை பெற்றோருக்கு ஏற்க நேரிடுகின்றதென்பதையும்;

(iii) எனவே, பாடசாலை சீருடைக்கான துணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக வேறொரு முறையியல் பின்பற்றப்பட வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1570/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) அம்பாறை மாவட்டத்தில்,

(i) நிர்வாக ரீதியில் தமிழ் மற்றும் சிங்களம் என செயற்படும் பிரதேச செயலாளர் பிரிவுகளின் பெயர்களை தனித்தனியாகவும்;

(ii) இலங்கை திட்டமிடல் சேவையில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களாக சேவையாற்றும் அலுவலர்களின் பெயர்களையும்;

(iii) 2009.06.28 ஆம் திகதிய MF13/LC உள்ளீர்ப்பு இலக்க நிதி அமைச்சின் சுற்றுநிருபம் மற்றும் 2007.05.23 திகதியிடப்பட்ட A4/6/24/2007 ஆம் இலக்க பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றுநிருபம் ஆகியவற்றின் பிரகாரம் மிகை அடிப்படையில் அலுவலர் சேவையாற்றுவோரின் பெயர்களை, பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையிலும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) மிகை அலுவலர்கள் சேவையாற்றும் அலுவலகங்கள் வெற்றிடங்கள் உள்ளவையாகக் கருதப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், அம்பாறை மாவட்டத்திலுள்ள சிங்கள மொழிமூலமான பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து அலுவலர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் இத்தகைய வெற்றிடங்கள் நிரப்பப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

10.

1608/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிரேஷ்ட பிரசைகளின் ரூபா 1.5 மில்லியன் வரையிலான நிலையான வைப்புகளுக்கு 15% வட்டியை வழங்கக் கோரும் சுற்றறிக்கையொன்று அனைத்து வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதென்று 2016.11.21 ஆந் திகதி அல்லது அதை அண்மித்த திகதியொன்றில் தொலைக்காட்சி நேர்காணலொன்றின் போது அவர் குறிப்பிட்டார் என்பதையும்;

(ii) அதற்கு மாறாக, தேவையான அறிவுறுத்தல்களுடன் சுற்றறிக்கைகளை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பியதாகவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிடப்பட்ட அந்த பணிப்புரையை நிறைவேற்றத் தவறியுள்ளது என்று குறிப்பிட்டதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) 2017.01.31 ஆந் திகதி வரைக்கும் அரச வங்கிகள் உள்ளடங்கலாக அனைத்து வங்கிகளும் அந்த சுற்றறிக்கையை அமுல்படுத்தியிருக்கவில்லை என்பதையும்;

(ii) அதனால் சிரேஷ்ட பிரசைகளுக்கு ஏற்பட்ட நட்டம் இலட்சக்கணக்கான ரூபாய்களாகும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) வங்கிகளால் அமைச்சரின் சுற்றறிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதற்கான காரணத்தை அல்லது அடிப்படையையும்;

(ii) கௌரவ அமைச்சர் 2015 நவம்பர் மாதத்தில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கிணங்க எந்தத் திகதியிலிருந்து இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதையும்;

(iii) கௌரவ அமைச்சரின் குறிப்பிடப்பட்ட அந்த பணிப்புரை விடுக்கப்பட்ட திகதியிலிருந்து சிரேஷ்ட பிரசைகளுக்கு இழப்பீடுகளை கௌரவ அமைச்சர் செலுத்துவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

1050/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— மாநகரசபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் உள்ள அரசாங்க கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் அரசாங்க கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அமைச்சுக்களில் குத்தகைக் கூலி செலுத்தும் மற்றும் செலுத்தாத அமைச்சுக்கள், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) குத்தகை செலுத்தும் அமைச்சுக்கள், ஒரு சதுர அடிக்கு செலுத்தும் குத்தகைக் கூலி மற்றும் சேவை கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) இக்கட்டிடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக உள்ள இடப்பரப்புக்கு கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், இத்தொகை யாதென்பதையும்;

(vii) வாகனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் மேற்படி கொடுப்பனவு முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1258/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்களும் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1304/ ’16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்புறுபிட்டிய, கரபுட்டுகல, “ஆரிய இல்லத்தில்” வசிக்கும் திரு. தில்லிமுனி உபாலி தனக்குரிய காணியொன்றின் நிர்ணயித்துக் கொள்வதற்கான சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக சட்ட ஆலோசனை ஆணைக்குழுவின் மாத்தறை அலுவலகத்தின் உதவியை நாடியுள்ளார் என்பதையும்;

(ii) சட்ட ஆலோசனையைப் பெறுவதற்காக தேவைப்படும் பிரச்சினைக்குரிய காணியின் உறுதிப்பத்திரம் மூல வரைபடம் காணி விபரப் பதிவேடு உட்பட மேலும் பல கடிதங்களின் மூலப்பிரதிகள் மேற்கூறிய அலுவலகத்துக்கு ஒப்படைத்துள்ளார் என்பதையும்;

(iii) தனக்கு தொடக்கம் சட்ட உதவிகளோ ஆலோசனைகளோ தேவையில்லை என்றும், நீதிமன்ற நடவடிக்கையை நாடுவதற்கான அவசியம் கிடையாது என்பதனால், ஒப்படைக்கப்பட்ட கடிதக் கோப்பை மிண்டும் தனக்கு தரும்படி அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பதையும்;

(iv) எனினும், இதுவரை கடிதக் கோப்புகள் வழங்கப்படுவதை அல்லது எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பாக அறிவிப்பதை சட்ட உதவி ஆணைக்குழுவின் மாத்தறை பிரதேச அலுவலகம் தொடர்ந்து மறுத்து வருகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. உபாலியினால் ஒப்படைக்கப்பட்டுள்ள கடிதக் கோப்பை மீண்டும் அவருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1315/ ' 16

கௌரவ எம்.எச் எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்கள் அரசாங்க காணிகளை அளிப்புப் பத்திரத்தின்/அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள விண்ணபித்துள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு இற்றைவரை அளிப்புப் பத்திரத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1379/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 134 ஆம் முன்மொழிவுக்கு அமைவாக, சமுர்த்தி பயனுகரிகளுக்கு விநியோகிப்பதற்காக 44000 மெற்றிக் தொன் அரிசி கொள்வனவு செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எந்த விலையில் எத்தரப்பிடமிருந்து என்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவை நடைமுறைப்படுத்தல் சார்பில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் யாதென்பதையும்;

(iv) 44000 மெற்றிக் தொன் அரிசியானது சமுர்த்தி பயனுகரிகளுக்கு மத்தியில் விநியோகிகப்பட்ட விகிதம் யாதென்பதையும்;

(v) அரிசி விநியோகிக்கப்பட்ட காலப் பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 மே 25, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

902/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாகியுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க புதிய அரசாங்கத்தின் கீழ் குழுவொன்று நியமிக்கப்பட்டு அல்லது வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி குழு நியமிக்கப்பட்டு அல்லது வேலைத்திட்டமொன்று தயாரிக்கபட்டு இருப்பது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழா; ஆமெனில், மேற்படி அங்கீகாரம் பெறப்பட்ட திகதி யாது;

(iii) அரசியல் பழிவாங்கல்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக கவனத்திற் கொள்ளப்படும் கால எல்லை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பழிவாங்கலுக்கு ஆளாகியுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் யாது;

(ii) அவ்வாறு பழிவாங்கலுக்கு ஆளாகி, நிவாரணங்கள் பெற்று, பதவியுயர்வு பெற்றுள்ளவர்களின் பெயர், பழிவாங்கலுக்கான காரணம் மற்றும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணம் தனித்தனியாக யாது;

(iii) இவர்களுக்கு பதவியுயர்வோடு நிலுவைச் சம்பளம் வழங்கப்படுகின்றதா;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

928/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2015.01.08 தொடக்கம் 2016.08.01 வரை இலங்கை வெளிநாட்டுத் தூதுப் பணிக்காக நியமிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்கள் அல்லாத ஆட்களின் பெயர்கள், பிறந்த திகதிகள், இலங்கை முகவரிகள், கல்வித் தகைமைகள், சேவை அனுபவங்கள், நியமிக்கப்பட்ட நாடுகள் மற்றும் பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இவர்களில் இரட்டை பிரஜாவுரிமை நிலைகள்/ வெளிநாட்டு பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள ஆட்கள் யாவர் என்பதையும்;

(iii) அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட மேற்படி ஆட்களுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

931/ '16

கௌரவ சந்திம கமகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கை மின்சார சபை, தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்கையில், கேள்விப்பத்திர நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறித்து அறிவாரா;

(ii) இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்சார கொள்வனவுகளின்போது கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அச்சந்தர்ப்பங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

945/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) 2015.12.09 ஆந் திகதி தொடக்கம் 2016.09.30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குள் நியமிக்கப்பட்ட தூதுவர்கள், உயர் ஸ்தானிகர்கள், பிரதித் தூதுவர்கள், பிரதி உயர் ஸ்தானிகர்கள் மற்றும் அந்த மட்டத்தைச் சேர்ந்த வேறு பதவிகளை வகிக்கின்ற வெளிநாட்டுச் சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாட்டுச் சேவையைச் சாராத உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) 2016.09.30 ஆந் திகதியளவில் மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்ட பதவிகளை வகிக்கின்ற வெளிநாட்டுச் சேவையை சாராத உத்தியோகத்தர்களின் பெயர்கள், தொழில்சார் தகைமைகள், அதிகபட்ச கல்வித் தகைமைகள் மற்றும் தற்போது வகிக்கின்ற பதவிகள் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1004/ ‘16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) யுத்தத்தின் பின்னர் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருமளவு தங்கம் எங்கேனும் நம்பிக்கைப் பொறுப்பில் வைப்பீடு செய்யப்பட்டதா என்பதையும்;

(ii) இவ்வைப்பீடுகளைக் கணக்கிட முடியுமா என்பதையும்;

(iii) இதுவரையில் அவர்களின் தங்கம் அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவில்லை யென முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி (i) தொடர்பில் கிடைக்கக் கூடியதாகவுள்ள விபரங்கள்;

(v) இக்கோரிக்கைகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் ;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1051/ ’16

கௌரவ புத்திக்க பத்திரண,— மாநகரசபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் உள்ள அரசாங்க கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் அரசாங்க கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) குத்தகைக் கூலி செலுத்தும் மற்றும் செலுத்தாத அமைச்சுக்கள், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) குத்தகை செலுத்தும் அமைச்சுக்கள், ஒரு சதுர அடிக்குச் செலுத்தும் குத்தகைக் கூலி மற்றும் சேவைக் கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) இவற்றில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக உள்ள இடப்பரப்புக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனின், இத்தொகை யாதென்பதையும்;

(vii) வாகனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு முறையியல் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் உள்ள தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படும் அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்கட்டிடங்களில் ஒரு சதுர அடிக்கு செலுத்தும் குத்தகைத் தொகை மற்றும் சேவைக் கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) இக்கட்டிடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக உள்ள இடப்பரப்புக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1134/ ’16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2014 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நாட்டினுள் அரிசி பற்றாக்குறை ஏற்பட்டதாக லங்கா சதொசவிற்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) அரிசி இறக்குமதி செய்யப்பட்ட காலகட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) அதன் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) அதன்பொருட்டு பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், விலைகளைச் சமர்ப்பித்துள்ள கம்பனிகள் யாவையென்பதையும்,

(vii) மேற்படி அரிசித் தொகையின் பெறுமதி யாதென்பதையும்,

(viii) மேற்படி அரிசித் தொகை களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் துறையின் களஞ்சியங்கள் யாவையென்பதையும்;

(ix) அரிசியை களஞ்சியப்படுத்துவதற்காக செலவிடப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(x) தனியார் துறையின் களஞ்சிய வசதிகளை பெற்றுக்கொள்ளும்போது பெறுகைகள் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் என்?

8.

1235/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தினுள் 1983 ஆம் ஆண்டளவில் இருந்த மொத்த வீதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றில் தார் இடப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை மற்றும் கிலோ மீட்டர் அளவு எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டு தொடக்கம் யுத்தம் முடிவடையும் வரை இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக அப்போதிருந்த அரசாங்கங்களினால் செலவு செய்யப்பட்ட நிதித் தொகை ஒவ்வோர் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தம் முடிவடைந்த பின்னர் இம்மாவட்டத்தில் வீதிகளை நிர்மாணிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட நிதித் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(v) இது தொடர்பான முழுமையான அறிக்கையை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1306/ ’16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துவதற்காக மாத்தறை மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள மாத்தறை மாவட்டத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவுசெய்து கொள்வதற்காக காணப்படவேண்டிய குறைந்தபட்ச நிலைமைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1316/ ’16

கௌரவ எம்.எச் எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று கிரான் தெற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்கள் அரசாங்க காணிகளை அளிப்புப் பத்திரத்தின்/அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு இற்றைவரை அளிப்புப் பத்திரத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1380/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 150 ஆம் இலக்க முன்மொழிவின்படி தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு (NAQDA) ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியனில், பொதுத் திறைசேரியினால் வருடத்தினுள் வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்படி நிதி ஏற்பாட்டினை செலவு செய்வதற்காக திட்டவட்டமான கருத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட மேற்படி ரூபா100 மில்லியன் செலவு செய்யப்பட்ட முறை பற்றிய நிகழ்ச்சித்திட்ட விபரமொன்றைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1707/ ’17

கௌரவ விதுர விக்கிரமநாயக்க,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் மற்றும் நுண்பாக கைத்தொழில்களுக்கு சலுகை வட்டியின் அடிப்படையில் இரண்டு வருடகால சலுகைக் காலத்துடன் SMILE III கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதென்பதையும்;

(ii) கருத்திட்ட பணிப்பாளரினால் 2016 யூலை மாதம் 10 ஆம் திகதி பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டு, கடன் வழங்குதல் சம்பந்தமாக பிரச்சாரம் செய்யப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் கடன் வழங்குவதற்கு 10 வர்த்தக வங்கிகள் முன்வந்ததுடன், கடனை எதிர்பார்த்து 5000 கடன் விண்ணப்பதாரிகள் முன்வந்த போதிலும் கடன் வழங்குதல் நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) பல தொழில்முயற்சியாளர்களினால் தேவையான அடிப்படை செலவுகள் மேற்கொள்ளப்பட்டு பிணை உறுதிகளை கைச்சாத்திடல், ஈட்டுறுதிகளை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள போதிலும் கடன் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) இந்த நிலைமையின் காரணமாக புதிய தொழில்முயற்சிகள் மற்றும் மேம்படுத்தப்படும் தொழில்முயற்சிகள் இடைநடுவே தடைப்பட்டுள்ளதுடன், இது தேசிய பொருளாதாரத்திற்கும் பெரும் தாக்கமாக அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) கடன் தொகையை வழங்குவதற்கு ஆற்றல் இல்லையெனில், 2016.07.10 ஆம் திகதிய பத்திரிகைளில் அறிவித்தல்களை வெளியிட்டு மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியதற்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

1052/16

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விதை நெல் உற்பத்தி செய்வதற்காகப் பதிவு செய்துள்ள கமக்காரர்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன என்பதையும்;

(ii) மேற்படி உற்பத்திகளுக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்பதையும்;

(iii) எனவே அவர்கள் மனம் தளர்ந்துள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) விதை நெல் செய்கையாளர்களின் உற்பத்தியை கொள்வனவு செய்வதற்கான முறையான வேலைத்திட்டமொன்று தயார் செய்யப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

1259/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் வவுனியா மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1381/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுதிட்டத்தின் 149 ஆம் இலக்க முன்மொழிவின் படி அநுராதபுரம், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கமத்தொழில், கால்நடை வளர்ப்பு, மீன் உற்பத்தி வலயங்களை நிறுவுவதற்கு ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) இந்த மூன்று கருத்திட்டங்களுக்குமான சாத்தியவள அறிக்கைகள் யாரால் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) இதன்படி, இந்த மூன்று கருத்திட்டங்களுக்காகவும் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மூன்று கருத்திட்டங்களுக்காகவும் 2016 ஆம் ஆண்டு நிறைவடையும் போது திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

(v) 2017 ஆம் ஆண்டுக்காக மேற்படி கருத்திட்டத்தின் சார்பில் வழங்கப்படக்கூடிய நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2017 மே 26, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

903/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணிக்கு (cadre) ஏற்ப அதிகார சபையின் நிரந்தர பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகள் யாவையென்பதையும்;

(iii) தற்போது பதில் கடமையாற்றுகின்ற நிலையிலுள்ள பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி பதவிகள் யாவையென்பதையும்;

(v) பதில் கடமையாற்றுகின்ற பதவிகளுக்கு நிரந்தர அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

976/ '16

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாணத்தின் சிலாபம், இரணவில பிரதேசத்தில் "அமெரிக்காவின் குரல்" (Voice of America) என ஒலிபரப்பு நிலையமொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அதற்காக வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(iii) மேற்படி காணி வழங்கப்பட்டுள்ளது இறையிலி அடிப்படையிலா இன்றேல் குத்தகை அடிப்படையிலா;

(iv) குத்தகை அடிப்படையிலாயின், இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ள குத்தகைத் தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்க வெவ்வேறாக யாது;

(v) இந்த நிலப்பரப்பில் இலங்கை அரசாங்கத்தின் அனைத்துச் சட்டதிட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) "அமெரிக்காவின் குரல்" நிறுவனத்தை ஆரம்பிக்க இலங்கை அரசாங்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் அல்லது "Voice of America" நிறுவனத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள் யாவை;

(ii) மேற்படி உடன்படிக்கைகள் அனைத்தையும் சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) மேற்படி நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) அந்நிறுவனத்தினால் ஆற்றப்படுகின்ற வேலைகள் மற்றும் ஒலிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் யாவை;

(v) மேற்படி வேலைகள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்குமுறையாக்குகின்ற இலங்கை அரச நிறுவனம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1008/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய பாதுகாப்புக்கும் மற்றும் சனநாயகத்துக்கும் அச்சுறுத்தலாகக் காணப்படுவதனால், 2015.01.08 ஆம் திகதி இரவில் சனாதிபதித் தேர்தல் முடிவுகளை இடைநிறுத்தும் சதித்திட்டமொன்று குறித்து முன்னுரிமை அடிப்படையில் புலனாய்வு செய்யுமாறு கோரி, 2015.01.14 ஆம் திகதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மங்கள சமரவீர குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடொன்றைச் சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(ii) இது தொடர்பில் நான் முன்வைத்த பாராளுமன்ற வாய்மூல வினாவுக்கு 2016.03.09 ஆந் திகதி விடை அளித்த, சட்டம், ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர், சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப் பெறாமையால் மேற்கொண்டு நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாக தெரிவித்தார் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட புலனாய்வு அறிக்கை சட்ட மாஅதிபருக்கு கிடைக்கப்பெற்ற திகதி யாது;

(ii) மேற்குறிப்பிட்ட புலனாய்வு பற்றிய சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் பொலிஸாருக்கு அனுப்பிவைக்கப்பட்ட திகதி யாது;

(iii) சட்ட மாஅதிபரின் ஆலோசனைகள் இதுவரையில் அனுப்பிவைக்கப் படவில்லையெனில், இதற்கு ஏதுவான காரணிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1167/ '16

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த அரசாங்கத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கண்டி நகர அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் செலவிடப்பட்டிருந்த பணத்தொகை யாது;

(ii) இக்கருத்திட்டத்திற்காக கடந்த அரசாங்க காலத்தில் வெளிநாட்டு உதவிகள் ஊடாக ஒதுக்கப்பட்ட பணத்தில் அத்தருணமாகும்போது கிடைத்திருந்த தொகை யாது;

(iii) புதிய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஏறக்குறைய 20 மாதங்கள் கழிந்துள்ள போதிலும், அக்காலப்பகுதிக்குள் இக்கருத்திட்டத்தின் எவ்விதமான அபிவிருத்திப் பணியும் இடம்பெறவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையின் பிரதான நகரமொன்றான கண்டி போன்றதொரு நகரத்தின் நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தை இடைநிறுத்த அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1260/ ' 16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்களும் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1307/ ' 16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள மத்திய அரசுக்குரிய வீதிகளின் கிலோமீற்றர் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தரப்படுத்தலுக்கு அமைய வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரை மாத்தறை மாவட்டத்தில் காப்பட் இடப்பட்டுள்ள வீதிகளின் கிலோமீற்றர் அளவு ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) 2013 முதல் 2016 ஆம் ஆண்டுவரை மாத்தறை மாவட்டத்தில் வீதிகள் அபிவிருத்தி மற்றும் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1317/ ' 16

கௌரவ எம்.எச் எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்கள் அரசாங்க காணிகளை அளிப்புப் பத்திரத்தின்/அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு இற்றைவரை அளிப்புப் பத்திரத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1326/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— உள்ளக அலுவல்கள், வட மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இராஜ துரோகிகளாக பிரகடனஞ் செய்யப்பட்ட இலங்கையர்கள் யாவர்;

(ii) இவர்கள் இராஜ துரோகிகளாக பிரகடனஞ் செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இராஜ துரோகியாக பிரகடனஞ் செய்யப்பட்ட பின்னர் அவர் இழக்கின்ற சிறப்புரிமைகள் யாவை;

(ii) அத்தகைய சிறப்புரிமை இழப்பு அவர்களின் குடும்பத்தவர்களைப் பாதிக்குமா;

(iii) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒல்லாந்தர்களால் இராஜ துரோகிகளாக பிரகடனஞ் செய்யப்பட்ட இலங்கையர்களை அப்பதிவேடுகளிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) இவர்களை தேசிய வீரர்களாக பிரகடனஞ்செய்ய நடவடிக்கை எடுப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1383/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 147 இன்படி, மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் இறக்குமதிக்கான விசேட வியாபாரப் பண்டங்கள் வரி ரூபா 50/- வரை அதிகரிக்கப்பட்டதன் மூலம், அரச வருமானத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு யாது என்பதையும்;

(ii) 1977ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் அளவும் இறக்குமதிப் பெறுமதியும் ஒவ்வொரு ஆண்டு வாரியாக யாது என்பதையும்;

(iii) சுங்கத் தரவுகளின்படி, இலங்கைக்கு மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்களின் பெயர் பட்டியலைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இலங்கைக்கான மீன் இறக்குமதியை குறைப்பதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1546/ '17

கௌரவ விமலவீர திசாநாயக்க,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை, கல்முனை வீதி, எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் வசிக்கும் திரு. டபிள்யு.ஜீ. சிறில் பெரேரா மேற்படி முகவரியில் 17 ஆண்டுகள் தொடர்ந்து வசித்து வருகின்றார் என்பதையும்;

(ii) மேற்படி காணிக்கு சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்காக நீண்டகாலமாக விடுக்கப்பட்டுவந்த கோரிக்கைக்கு அமைவாக அம்பாறை பிரதேச செயலகத்தினால் சுற்றறிக்கை இலக்கம் 2008/4 இற்கு அமைவாக நடத்தப்பட்ட காணிக் கச்சேரியொன்றில் 20 பர்ச்சஸ் காணிப் பகுதியொன்றை இவருக்கு பெற்றுக்கொடுக்க விதந்துரைக்கப்பட்டதென்பதையும்;

(iii) எனினும், மேற்படி காணிப் பகுதியை பல்வேறு காரணங்களை முன்வைத்து பெற்றுக்கொடுக்காமை பற்றி இவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு விளக்கமளித்த பின்னர், இவ்வாணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் இறுதியில் இவர் வசிக்கும் காணியை சட்டரீதியாக இவருக்கு பெற்றுக்கொடுக்க விதந்துரைக்கப்பட்டதென்பதையும்;

(iv) எனினும், இற்றைவரையில் இவருக்கு மேற்படி காணியின் உரிமை பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. பெரேராவிற்கு ஏற்பட்ட மேற்படி பாதிப்பு மற்றும் அநீதிக்கு நியாயமான நிவாரணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1043/ ’16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையின் வருடாந்த அமர்வுக்கான சனாதிபதி அவர்களின் விஜயத்தின்போது கலந்து கொண்ட தூதுக் குழுவினர் எத்தனை பேர்;

(ii) மேற்படி விஜயத்தில் கலந்து கொண்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் தூதுக் குழுவில் உள்ளடங்கிய அடிப்படை வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி விஜயத்துக்காக அரசு, அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1261/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருந்த பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் முடிவடையும் வரையிலான காலப்பகுதியில் அழிவுக்குள்ளாக்கப்பட்ட பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iv) பயங்கரவாதிகளின் தாக்குதலினால் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(v) மேலே (iii) இல் குறிப்பிடப்பட்ட அழிவுற்ற சொத்துக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா;

(vi) மேலுள்ள அனைத்து விடயங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1308/ ’16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊடகவியலாளர் திரு. லசந்த விக்கிரமதுங்கவை தாமே படுகொலை செய்ததாக குற்றஒப்புதல் குறிப்பொன்றை எழுதிவிட்டு கேகாலை பிரதேசத்தின் ஓய்வுபெற்ற புலனாய்வு பிரிவின் அங்கத்தவர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதென்பதையும்;

(ii) இது தற்கொலையா அல்லது படுகொலையாவென சந்தேகம் எழுந்துள்ளதாக மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் விஷேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளாரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஓய்வுபெற்ற புலனாய்வு பிரிவு அங்கத்தவரின் மரணம் பற்றி பிரேத பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மருத்துவ முடிவு யாதென்பதையும்;

(iii) நிகழ்ந்தது தற்கொலை இல்லையெனில், மரணத்திற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) பொறுப்புவாய்ந்த ஒரு பிரசை என்ற வகையில் பிரதி அமைச்சர் வெளியிட்டுள்ள கூற்று பற்றி ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஊடகவியலாளர் திரு. லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை பற்றி மேற்கொள்ளப்படும் விசாரணையின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

1328/ '16

கௌரவ புத்திக பத்திரண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்டபதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படும் காற்று மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து இலங்கை மின்சார சபை மின் அலகொன்றைப் பெற்றுக்கொள்ளும் விலையானது ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையங்களில் வ/ப எல்டீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனிக்குச் சொந்தமான மின் உற்பத்தி நிலையங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆனையிறவில் நிர்மாணிக்கப்படும் புதிய காற்று மின் உற்பத்தி நிலையத்திலிருந்து இலங்கை மின்சார சபைக்கு மின் அலகொன்று வழங்கப்படும் விலை யாது;

(ii) காற்று மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து குறைந்த விலையில் மின் அலகொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா;

(iii) ஆமெனில், அது எவ்வாறு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1384/ ’16

கௌரவ பந்துல குணவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 146 ஆம் இலக்க முன்மொழிவின் படி, மீன்களைத் தகரத்திலடைக்கும் உள்நாட்டுத் தனியார் துறையை ஊக்குவிப்பதற்காக லக் சதொசவிற்கு ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) இந்த ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் நன்மைகளை பெற்றுக்கொடுக்கக்கூடிய டின்மீன் உற்பத்தியாளர்கள் யாவரென்பதையும்;

(iii) கடந்த சில வருடங்களில் இவர்களின் வருடாந்த டின்மீன் உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(iv) 1977 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்ட டின்மீன் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் தொகை ஒவ்வொரு வருடத்திற்கேற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) அரசாங்கத்தினால் டின்மீன்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ரூபா 125/- கட்டுப்பாட்டு விலை சந்தையில் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2017, மே 26, வெள்ளிக்கிழமை)

925/ ’16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பியதாஸ குடா பாலகே என்பவர் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் வகித்த பதவிகள் யாவை என்பதையும்;

(ii) அந்தப் பதவிகளை வகித்த கால எல்லை ஒவ்வொரு பதவிக்கேற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவரது கல்வி மற்றும் தொழில் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) இவர் ஒவ்வொரு பதவிக்காக பெற்றுக் கொண்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# 2017 யூன் 06, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

387/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்துக்கு தேகப்பயிற்சிகளுக்குத் தேவையான கன்வஸ் பாதணிகளை கொள்வனவு செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்திருந்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் சமர்ப்பித்திருந்த கேள்விப்பத்திரங்களின் பெறுமதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, பாதுகாப்பு அமைச்சின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iii) 2015 ஆண்டில் மேற்படி பாதணி கொள்வனவுடன் தொடர்புடைய, இராணுவத்தின் கேள்விப்பத்திர சபையில் இருந்த உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உத்தியோகத்தர்கள் கேள்விப்பத்திர சபையில் எவ்வளவு காலமாக பணியாற்றுகின்றார்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பாதுகாப்பு அமைச்சின் மற்றும் இராணுவத்தின் கேள்விப்பத்திர சபைகளில் தொடர்ச்சியாக பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத்திகதியில் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1101/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதிக்குப் பின்னர் தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் இற்றைவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்கூறிய வீடுகளை நிர்மாணிக்கும் போது வீடமைப்புக் கடன்களாக வழங்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த வீடமைப்புக் கடன்கள் மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015.01.08 ஆம் திகதியின் பின்னர் அதிகாரசபையினால் இது வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள உதவிகள் பெறுனர்களின் வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தப் பணத்தொகை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2015.01.08 ஆம் திகதியின் பின்னர் அதிகாரசபையினால் இது வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கிராமங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்தப் பணத்தொகை மாவட்ட அடிப்படையில் வெவ்வோறக எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3.

1123/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "சமுர்த்தி மாதிரிக் கிராமங்கள்" எனும் பெயரில் தங்களது அமைச்சினால் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டத்தின் நோக்கம் யாது;

(iii) மேற்படி கருத்திட்டத்துக்காக பதுளை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராமங்கள் யாவை;

(iv) மேற்படி கிராமங்களை முன்னேற்றுவதற்காக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1310/ ’16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “ஜயனதி” கிரலவெல்ல, தெவிநுவர என்ற முகவரியில் வதியும் திரு. பீ.எம். நந்தசேன கடற்றொழிலாளர் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தவராவார் என்பதையும்;

(ii) 60 வயதை பூர்த்தி செய்தமையால் தமக்கு உரித்தான ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கு இலக்கம் MT/3279 இன் கீழ் முறையான விண்ணபமொன்றை சமர்ப்பித்துள்ளார் என்தையும்;

(iii) கடற்றொழில் மற்றும் நீரியல் வளமூல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி பணிப்பாளரினால் (க.ஓ.தி.) இலக்கம் மா /05/2/82 மற்றும் 2014.11.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாத்தறை, கமத்தொழில் காப்புறுதிச் சபையின் பணிப்பாளருக்கு நினைவூட்டப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) திரு. நந்தசேன, முறைப்படி தவணைத் தொகைகளை செலுத்தி, இதனை மாத்தறை உதவி பணிப்பாளர் சான்றுப்படுத்தியுள்ள போதிலும், ஓய்வூதியத்திற்கு பதிலாக, தேறிய தவணைத் தொகையையும் இதற்குரிய வட்டியையும் மாத்திரம் திருப்பிச் செலுத்துவதற்கு கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை தீர்மானித்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) தற்சமயம் 62 வயதை அடைந்துள்ள திரு. நந்தசேனவுக்குரிய ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1318/ ’16

கௌரவ எம்.எச் எம். சல்மான்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்கள் அரசாங்க காணிகளை அளிப்புப் பத்திரத்தின்/அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ள விண்ணபித்துள்ளார்களா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கோரிக்கைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு இற்றைவரை அளிப்புப் பத்திரத்தின்/ அனுமதிப்பத்திரத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1360/ ' 16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர் முறைமை தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் கல்வி பயின்று, 2015 ஆம் ஆண்டு முதற் தடவையாக க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றி, அதில் உயர் மட்ட பெறுபேறுகளைப் பெற்றுள்ள இரத்தினபுரி மாவட்ட மாணவர்கள் இதுவரை எந்தவொரு பல்கலைக் கழகத்திற்கும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பல்கலைக்கழக கைநூலில் மேற்படி பாடம் தொடர்பான பட்டப் பாடநெறிக்கு சப்பிரகமுவ பல்கலைக்கழகம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி பல்கலைக்கழகத்திற்கு இதுவரை எந்தவொரு மாணவரும் அனுமதிக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி கொழும்பு போன்ற வசதிகள் மிக்க மாவட்டங்களிலிருந்து குறைந்த Z புள்ளியின் கீழ் மாணவர்கள் 80 – 90 பேருக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைத்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக சனாதிபதி, பிரதம அமைச்சர், அமைச்சர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித நீதியும் நிறைவேற்றப்படவில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1364/ '16

கௌரவ திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 30 வருட கால போர் நிலைமை காரணமாக வட மாகாணத்தில் இடம்பெயர்வுகள், வாழ்விடங்களை இழத்தல், பொறுப்பாளர்கள் இல்லாமை, பெற்றோர் இழப்புகள் மற்றும் சொத்து இழப்புகள் ஆகிய காரணங்களினால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) மேற்படி காரணங்களினால் மாணவர்கள் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டமையை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி காரணங்களின் அடிப்படையில், வட மாகாண அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வயதெல்லையை 45 வயது வரை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1366/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதாரத் திணைக்களத்தினால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, பாலூட்டும் தாய்மார்களுக்கு மற்றும் 5 வயதுக்குக் குறைந்த நிறை குறைந்த பிள்ளைகளுக்கு போசாக்குமிக்க உணவான "திரிபோசா" வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) அவ்வாறு வழங்கப்பட்ட திரிபோசா, கடந்த 3 மாதத்துக்கு மேற்பட்ட காலத்திலிருந்து மலையகம் உள்ளிட்ட அநேகமான பிரதேசங்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரிபோசா வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(ii) அரசாங்கத்தினால் இற்றைவரை இலவசமாக வழங்கப்பட்ட திரிபோசாவை தனியார் சிறப்புச் சந்தைத் தொகுதிகள் ஊடாக விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, அண்மையில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் உண்மைத்தன்மை உள்ளதா;

(iii) திரிபோசாவை, ஏற்புடைய மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1371/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2016 வரவு செலவுத் திட்டத்தின் 125 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு உதவுகின்ற இன்கியுபேடராக செயற்படுகின்ற “சிறிய கைத்தொழில் பூங்காக்கள்” கருத்திட்டத்தின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் பூங்காக்களை அமைப்பதற்கு உத்தேசித்திருந்த மொணறாகல, புத்தளம், யாழ்ப்பாணம், வன்னி மற்றும் அம்பாறை மாவட்டங்களில் காணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இந்த சிறிய கைத்தொழில் பூங்காக்கள் கருத்திட்டம் தொடர்பாக மேற்படி மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி அரச ஊழியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1481/ '16

கௌரவ விதுர விக்ரமநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற களுத்துறை மாவட்டத்தின் பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவில் மேமா/மத்து/ நவான ஆரம்பப் பாடசாலை மண்சரிவு ஆபத்தை எதிர்கொண்டுள்ள இடமாக இனங்காணப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) நவான பிரதேசத்துக்கு தொடர்ச்சியாக மூன்று நாட்களுக்கு மழை நீடிக்குமானால் பாடசாலையை மூடி விட்டு அத் தினங்களுக்கு பதிலாக விடுமுறை நாட்களில் வகுப்புகளை நடாத்துமாறு மத்துகம வலயக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) போக்குவரத்து சிரமங்கள் மற்றும் பொருளாதார வசதியீனம் காரணமாக பெற்றோர்களால் தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளுக்கு அழைத்து செல்ல முடியாதுள்ளதால் ஆபத்தான நிலையிலும் அப் பாடசாலையிலே கற்பிக்க வேண்டி நேரிட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மூன்று நாட்களுக்கான மழை ஒரே நாளில் பெய்யுமானால் அப் பாடசாலையில் வகுப்புகளை நடாத்துவதில் ஆபத்தான நிலைமையொன்று தோற்றுவிக்கப்படாதா என்பதையும்;

(ii) இந்த ஆபத்தான நிலைமையிலிருந்து பிள்ளைகளை மீட்டெடுப்பதற்கு அப் பிரதேசத்தில் வேறொரு பொருத்தமான இடத்தில் நவான ஆரம்ப பாடசாலையை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1482/ '16

கௌரவ ரோஹினி குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரே தேசிய பாடசாலையில் 10, 15, 20 மற்றும் 30 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு வருடாந்த இடமாற்றங்களை பெற்றுக்கொடுக்கும் தேசிய கொள்கை கல்வி அமைச்சிடம் காணப்படுகின்றதா;

(ii) ஆமெனில், இதற்கமைய 2017ஆம் வருடத்துக்கான இடமாற்ற முறையியலை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) மேற்படி திட்டத்துக்கமைய, ஆசிரியர் இடமாற்றம் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளதா;

(iv) இன்றேல், இதனை விரைவுபடுத்துவதற்கான திட்டமொன்று காணப்படுகின்றதா;

(v) மேற்படி இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1506/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.12.31ஆம் திகதியிலான ஊழியர் சேமலாப நிதியத்தின் இயங்கும் கணக்குகளின் எண்ணிக்கைக்கமைய தனியார் துறையில் தொழில் புரிவோர் எவ்வளவு;

(ii) 2014.12.31 மற்றும் 2015.12.31 ஆம் திதகதிகளுக்கு ஒப்பீட்டளவில் 2016.12.31 ஆந் திகதியிலான தொழில் புரிவோரின் அதிகரிப்பு எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

547/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) இலங்கையில் தங்கம் மற்றும் வெள்ளிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையானோர் உள்ளனரென்பதையும்;

(ii) தங்கம் மற்றும் வெள்ளி விலையேற்றத்தினாலும் வேறு காரணங்களினாலும் இந்த கைத்தொழில் வீழ்ச்சியடைந்து வருகின்றதென்பதையும்;

(iii) இந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழில்களை இழக்கவேண்டிய இடர்நேர்வு நிலவுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது;

(ii) அந்த ஆட்களுக்கு புதிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்துகொள்ள அரசாங்கத்தினால் சலுகைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அச்சலுகைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தங்கம் மற்றும் வெள்ளி விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

1215/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் அழிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அழிவடைந்துள்ள மேற்படி சொத்துகள் பற்றி அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடொன்று செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சொத்துகளின் மொத்த பெறுமதி யாதென்பதையும்;

(v) அழிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சொத்து தொடர்பாகவும் பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி (i) - (vi) வரை விசாரிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

1407/ ' 16

கௌரவ பந்துல குணவர்த்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 வரவு செலவுத்திட்டத்தில் 183 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், கௌரவ பிரதம அமைச்சரின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, தாபிப்பதற்கு முன்மொழியப்பட்ட விசேட கமத்தொழில் மற்றும் மீன்பிடி ஏற்றுமதி வலயங்களில், 2016 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட வலயங்களின் எண்ணிக்கை மற்றும் அவை தாபிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பிரேரணைக்கு அமைய, தாபிக்கப்பட்ட ஒவ்வொரு வலயத்திற்காகவும் அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட மொத்த செலவினம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த கமத்தொழில் மற்றும் மீன்பிடி ஏற்றுமதி வலயங்களின் பொறுப்பை எந்த அரச நிறுவனம் ஏற்றுள்ளது என்பதையும்;

(iv) 2016 ஆம் ஆண்டில் அவ்வாறான வலயங்கள் தாபிக்கப்பட்டிருப்பின், மேற்படி ஒவ்வொரு வலயத்தினதும் ஏற்றுமதி வருவாய் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2017 யூன் 07, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

859/ ’16

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதுபானம் அருந்துதல் அதிகரித்துள்ளதென்பதையும்;

(ii) மதுபானம் அருந்துதல் ஆட்களின் சுகாதாரச் சீர்கேட்டிற்கு பிரதானமானதொரு காரணமாக அமைகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மதுபானம் அருந்துவதைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மதுபானம் அருந்துதல் காரணமாக ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அரசாங்கம் வருடமொன்றிற்கு செலவிடும் பணத்தொகை அண்ணளவாக எவ்வளவென்பதையும்;

(iv) இப்பணத்தொகை சுகாதாரத்திற்காக அரசாங்கம் செலவிடும் பணத்தொகையின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1263/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் வரை செல்கின்ற வடக்கு புகையிரத பாதை அமைக்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) 1983 ஆம் ஆண்டளவில் யாழ்தேவி புகையிரதம் வடக்கு புகையிரத பாதையில் நாளொன்றில் எத்தனை தடவைகள் சென்றுள்ளதென்பதையும்;

(iii) 1983 ஆம் ஆண்டளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரையும் வருடாந்தம் பயணித்துள்ள பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) 1980 முதல் 1983 ஆம் ஆண்டு வரை பெற்ற வருடாந்த வருமானம் ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) புகையிரதப் பாதை பயங்கரவாதத் தாக்குதலால் அழிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(vi) தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடம் யாதென்பதையும்;

(vii) ஏற்பட்ட அழிவு எவ்வளவென்பது கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அது எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு புகையிரத பாதையை புனரமைக்க ஒவ்வொரு ஆண்டிலும் ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது எத்தனை தடவைகள் செல்கின்றதென்பதையும்;

(iii) 2009 முதல் இற்றைவரை ஒவ்வொரு வருடத்திலும் பயணித்துள்ள பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வருடத்திலும் பெற்றுக்கொண்டுள்ள வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1339/ '16

கௌரவ எம். எச். எம். சல்மான்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1992 ஆம் ஆண்டில் பொலனறுவை மாவட்டத்தில் பல்லியகொடெல்ல மற்றும் அக்பர்புரம் ஆகிய கிராமங்களுக்கு புலிப் பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் உயிரிழந்த, வீடுகளையும் சொத்துக்களையும் இழந்த அல்லது வேறு வகையில் பாதிப்புக்கு உள்ளானவர்கள் பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பயங்கரவாத தாக்குதலால் உயிரிழந்தவர்களிடையே அப்போது குடும்பத்தின் பிரதான குடியிருப்பாளர்களாக இனங்காணப்பட்டிருந்த ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் போது கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அமைச்சின் பொதுவான அளவுகோல்களில், உப குடும்பங்களாகக் கருதும் முறையியலின் காரணமாக மேற்படி பயங்கரவாத தாக்குதலைச் சந்தித்தபோது 18 வயதிற்கு குறைந்தவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், DPS/DD-3/Housing Proj/2016 இன் கீழ் அமுலிலுள்ள, அச்சுறுத்தலுக்கு உள்ளான கிராமங்களில் மீள்குடியேற்றத்திற்கான வீடு பெறுனர்களை தெரிவுசெய்யும்போது அப்போது பராயமடையாத வயதினராயிருந், தற்போது ஒரு குடும்பமாக வாழும் ஆட்களை உப குடும்பங்களாக அங்கீகரிக்க ஆலோசனை வழங்குவாரா என்பதையும்;

(v) மேற்படி உப குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1350/ ' 16

கௌரவ டலஸ் அலஹப்பெரும,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மாணவர்களுக்கு வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளைக் கற்பதற்கு இருந்த வாய்ப்புகளைக் குறைப்பதற்கான கொள்கைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) 2016 ஆம் ஆண்டில் வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளுக்கு அனுமதிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பட்டப் பாடநெறி மற்றும் ஆண், பெண் எனும் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iii) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் உயர் தரம் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இலங்கையினுள் செயற்படுகின்ற வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப் பாடநெறிகளைக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது;

(v) மேலே (iv) இல் குறிப்பிடப்பட்ட மாணவர்கள் கற்கும் பட்டப் பாடநெறிகள் யாவை;

(vi) இந்த ஒவ்வொரு பாடநெறியையும் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(vii) மேலே (v) மற்றும் (vi) க்கு விடை அளிக்கப்படாவிடின், அது ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1365/ '16

கௌரவ சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா,— பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு மாவட்டத்துக்குமென மேலதிக அரசாங்க அதிபர் (அபிவிருத்தி) பதவியொன்றும் ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்குமென உதவி பிரதேச செயலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) பதவியொன்றும் என்றவாறு புதிய பதவிகளை உருவாக்குவதற்காக நாடளாவிய ரீதியியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதையும், இதற்கு இலங்கை பொது நிருவாக சேவை உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதையும் ஏற்றுக்கொள்வாரா;

(ii) இலங்கையில் தற்போது காணப்படும் நாடளாவிய சேவைகளில் இலங்கை திட்டமிடல் சேவையும் ஒன்றாக உள்ளதோடு, இச்சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு தகுந்த பதவிகள் உருவாக்கப்படாமையால், முதலாம் தரத்தைச் சேர்ந்த அநேக உத்தியோகத்தர்கள் தரம் II மற்றும் தரம் III பதவிகளில் கடமை புரிகின்றனர் என்பதை அறிவாரா;

(iii) ஆகையால், புதிதாக உருவாக்கப்படவுள்ள இப்பதவிகளை திட்டமிடல் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1367/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின், புனானை நீராம் கிராமத்தில் தற்சமயம் 1837 குடும்பங்கள் வசிக்கின்றனவென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களில், 780 குடும்பங்களுக்கு இற்றைவரையில் நிரந்தர வீடுகள் கிடைக்கவில்லையென்பதுடன், 391 குடும்பங்கள் பெண்களை குடும்பத்தலைவர்களாக கொண்ட குடும்பங்களாகும் என்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களுக்கு அநேகமான அடிப்படை வசதிகளை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளதென்பதையும்;

(iv) அநேகமான கிராமவாசிகளுக்கு காணி உரிமப்பத்திரங்கள் இன்மை பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதென்பதையும்;

(v) குறிப்பாக பெண்களை குடும்ப தலைவர்களாக கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இம்மக்களின் மேற்படி தேவைப்பாடுகள் தொடர்பில் இற்றைவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அவை ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் முடிவுறுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) இற்றைவரையில், எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனில், இப்பிரச்சினை தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1388/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 142 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம், உள்நாட்டு பால் உற்பத்தியின் பொருட்டு ஆகக் குறைந்த முதலீடாகிய ரூபா 25 மில்லியனுக்கு உட்பட்ட வகையில் தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கு குறைபயன்பாட்டு அரச காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு கருதப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம் அரச காணிகளுக்காக விண்ணப்பித்த கம்பனிகளின் அல்லது ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு அரச காணிகள் தொடர்பான பட்டியலொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) வெளி விவசாயிகளைக் கொண்டு உயர் ஆக்கவிளைவுடனான புல் பயிரிடலுக்காக மேற்படி காணிகளிலிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள ஏக்கர்களின் அளவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1483/ '16

கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது புலனாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(iv) புலனாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதவற்றின் எண்ணிக்கை யாது;

(v) புலனாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(vi) தற்போது ஒன்றுதிரண்டுள்ள புலனாய்வுகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் திகதி யாது;

(vii) புலனாய்வு நடவடிக்கைகள் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை;

(viii) புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2017 யூன் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

863/ '16

கௌரவ புத்திக பத்திரன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பேரீச்சம் பழத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கைக்கு பேரீச்சம் பழம் இறக்குமதி செய்யப்படும் பிரதான நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பேரீச்சம் பழம் இறக்குமதியின் போது அதன் தரம் தொடர்பாக பரிசீலிக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில் அது எவ்வாறு என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டில் பேரீச்சம் பழம் இறக்குமதிக்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1266/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் கிழக்கு மாகாணத்தின் ஐந்து பொலிஸ் நிலையங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதில் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தாக்குதலின் போது காணாமல்போன பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தாக்குதலின்போது ஏற்பட்ட சொத்துகளுக்கான சேதம் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அது எவ்வளவென்பதையும்;

(v) அந்த அழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(vi) சம்பந்தப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) இந்த சம்பவம் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1362/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாத்தறை மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டுள்ள மாத்தறை மாவட்டத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்யப்படுவதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச நிலைமைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1368/ ’16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், அம்பாறை மாவட்டத்திலுள்ள, கல்முனை கல்வி வலயத்தில் அண்மையில் தரமுயர்த்தப்பட்ட தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்துடன் எட்டு தேசிய பாடசாலைகள் உள்ளனவென்பதையும்;

(ii) ஏற்கனவே மேற்படி தேசிய பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்படவில்லையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் உள்ளதாக தவறான தகவல்கள் கல்வி அமைச்சுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(iv) கல்வி அமைச்சின் சீரான மேற்பார்வையின்றி மேற்படி பாடசாலைகள் இயங்குவதாக இலங்கை கல்வி நிர்வாக உத்தியோகத்தர்களின் சங்கம் குற்றஞ்சாட்டுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் கட்டாயமாக பட்டதாரிகளாக இருக்க வேண்டுமென்ற பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட பாடசாலைகளுக்கு தகுதியான நிரந்தர அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1389/16

கௌரவ பந்துல குணவர்தன,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 141 ஆம் இலக்க முன்மொழிவுக்கமைவாக, உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு பக்கெற்றிற்கு ரூபா 30/= மானியம் பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி பால் உற்பத்திக்கான மானியத்தின் சார்பில், வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 1000 /- மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்ட விதத்தை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) பால் உற்பத்திக்கான மானியமானது எந்த அமைச்சின் ஊடாக எந்த நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதென்பதையும்;

(iv) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கையில் பால் உற்பத்தியானது ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை மில்லியன் லீற்றர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1393/ ’16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களுத்துறை மற்றும் வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்களிலுள்ள விவசாயிகள் உரமானியத்தை பெற்றுக்கொள்ள வந்த போது மானியத்துக்கான விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பட பிரதியொன்றையும் சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார் என்பதையும்;

(ii) அநேகமான விவசாயிகள் தேசிய அடையாள அட்டை இல்லையென கூறியபோது அடையாள அட்டையின் பிரதியை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டுமென சுற்றுநிருபமொன்று அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அந்தப் பிரதேச விவசாயிகளிடம் உள்ள முதியோர் அடையாள அட்டை, கடவுச் சீட்டுக்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் என்பவற்றை தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இந்த சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1507/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட மொத்தக் கடன்களின் பெறுமதி யாது;

(ii) 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட கடன்களுக்காக செலுத்த வேண்டிய நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் யாது;

(iii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பீட்டளவில், 2016ஆம் ஆண்டில் நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் மாற்றமடைந்துள்ள பெறுமதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1560/ ’17

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட “கமட்ட சவிய - சதொச படிய” நடமாடும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் தற்போது அமுலில் உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதி யாது என்பதையும்;

(iv) இதற்காக ஏற்கப்பட்ட மொத்தச் செலவு பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் உரியவாறான சாத்தியக்கூறுக் கற்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் அவசியத்தன்மை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1569/ '17

கௌரவ இம்ரான் மஹரூப்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்ட மூலங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மூலத்திலிருந்தும் ஒதுக்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அதற்கென செலவிடப்பட்ட மொத்தச் செலவு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ் விளையாட்டு மைதானம் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் திறந்து வைக்கப்பட்டதென்பதையும்;

(ii) அதன் நினைவுப் பலகையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரின் பெயர்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி பெயர்கள் குறிப்பிடப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(ii) அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நிலையில் இவர்களுடைய பெயர்கள் மேற்படி நினைவுப் பலகையில் குறிப்பிடப்படாதமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு மைதானத்துக்கு இடப்பட்டுள்ள பெயர் தொடர்பாக ஏற்புடைய செயல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அரச நிதியில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது ஒரு கட்சிக்கு மாத்திரம் முன்னுரிமை அளித்து கட்சியொன்றுக்கு பிரச்சாரத்தை தேடித்தருவது நல்லாட்சியின் ஓர் பண்பாகுமென ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(v) இத் தவறை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

1574/ ' 17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அண்மித்த 5 கல்வி ஆண்டுகளினுள் அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் மஹபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டமாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மஹபொல புலமைப் பரிசிலுக்காக மாதாந்தம் செலுத்தப்படுகின்ற பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹபொல புலமைப் பரிசில்களை வழங்கும் போது திறமை அடிப்படையில் (on merit basis) புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு மாணவர்களை தெரிவு செய்யும் முறையியல் யாது என்பதையும்;

(ii) கடந்த அண்மித்த 5 கல்வி ஆண்டுகளினுள், மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயிரியல், கணிதம், வணிகம் மற்றும் கலை பாடப் பிரிவுகளுக்காக திறமை அடிப்படையில் மஹபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, கல்வி ஆண்டு மற்றும் பாடப் பிரிவுகளுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி 5 கல்வி ஆண்டுகளினுள், மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களில், அந்தந்த பாடப் பிரிவுகளுக்கு அமைய, குறைந்தபட்ச தகைமையினை பெற்றுள்ள மாணவ மாணவிகளின் க.பொ.த. (உ.த.) பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய குறித்த மாவட்ட நிலை (District Rank) மற்றும் நாடளாவிய நிலை (Island Rank) கல்வி ஆண்டு மற்றும் பாடப் பிரிவுகளுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

1673/ ' 17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக இலங்கை கல்வி நிர்வாகச் சேவை II ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலரான திரு. ஏல்.எம். முக்தார் பணியாற்றுகிறார் என்பதையும்;

(ii) அம்பாற வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றுகின்றவர் இலங்கை கல்வி நிர்வாகச் சேவையில் திரு. முக்தாரை விட கனிஷ்ட அலுவலர் என்பதையும்;

அவர் அறிவாராரா?

(ஆ) (i) கனிஷ்ட அலுவலர் ஒருவரின் கீழ் உயர்தரமுடைய சிரேஷ்ட அலுவலர் ஒருவர் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவாரா என்பதையும்;

(ii) திரு. முக்தாரை அவரின் தரத்திற்கும், மூப்புரிமைக்கும் ஏற்ப இடமாற்றமொன்றினை அவருக்கு வழங்குதல் அல்லது திரு. முக்தாரை விட சிரேஷ்ட அதிகாரியொருவரை அம்பாறை வலய, வலயக் கல்விப் பணிப்பாளராக நியமித்த ஆகியவற்றின் மூலம் இந்த முறைகேட்டினை நிவர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆம் எனில் எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

12.

891/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தங்கம், வெள்ளி மற்றும் இரும்பு சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிலாளர்கள் பாரம்பரியமாக, வசிக்கும் பிரதேசங்கள் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில், வசிக்கும் மேற்படி கைத்தொழிலில் பாரம்பரியமாக ஈடுபடும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரதானமான பிரச்சினைகள் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அப்பிரச்சினைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலாளர்களுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பம் மற்றும் பயிற்சிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

(iii) உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குத் தேவையான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதற்கு அரசாங்கம் தலையிட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றவா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நாடுகள் யாவை என்பதையும்;

(v) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இப்பொருட்கள் ஏற்றுமதியின் மூலம் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு வருமானம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

13.

1267/ ’16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அக்குடும்பங்களின் எண்ணிக்கை இவர்கள் பெறும் சமுர்த்தி முத்திரைகளின் பெறுமதிக்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) கடந்த சமுர்த்தி மதிப்பாய்வு மூலம் கிடைத்த அறிக்கைக்கேற்ப ஏதேனும் வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி மதிப்பாய்வுக்குப் பின்னர் கிடைத்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கேற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி மேன்முறையீடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1369/' 16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தின், வவுனியா தெற்கு பிரதேச யெலாளர் பிரிவில், ஓமந்தை சந்திக்கு கிழக்கே 7 கிலோ மீற்றர் தூரத்தில், இளமருதங்குளம் கிராமமும், அங்கிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் சேமமடு கிராமும் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) யுத்த நிலைமைக்கு முன்னர் இக்கிராமங்களில் 500 குடும்பங்கள் வாழ்ந்துவந்ததுடன், யுத்த நிலைமை முடிவடைந்ததன் பின்னர் தற்போது இளமருதங்குளம் கிராமத்தில் 19 குடும்பங்களும், சேமமடு கிராமத்தில் 65 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன என்பதையும்;

(iii) இக்கிராமங்களில் யுத்த நிலைமைக்கு முன்னர் சுமார் 1100 ஏக்கர் அளவான காணிப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தற்போது காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக விவசாயம் செய்வதற்கு முடியாத நிலைமை உருவாக்கியுள்ளது என்பதையும்;

(iv) இம்மக்களுக்கென எந்தவொரு வீடமைப்புத் திட்டமும் அமுல்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இளமருதங்குளம் மற்றும் சேமமடு கிராமங்ளில் வாழும் மக்களின் நலன்புரிக்காக தற்போது கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1390/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 136 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் நெல் விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 25,000/- உச்சளவின் கீழ் விநியோகிக்கப்பட்ட உர மானியத்தை பெற்றுக்கொண்டவர்களின் பெயர் பட்டியலொன்றை அத்தகைய ஒவ்வொரு ஆளுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதி அளிப்புகளுடன் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) 2005-2016 வரை ஒவ்வொரு ஆண்டுக்காகவும் உர மானியத்திற்கென அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட செலவினம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டில் உர மானியத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூபா 35,000 மில்லியன் தொகையில் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 37,500 மில்லியன் தொகையில் சேமிக்கப்பட்ட தொகை இருக்குமாயின், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 9/'15

கௌரவ புத்திக பத்திறண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 10/'15

கௌரவ புத்திக பத்திறண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 11/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 12/ '15

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 13/ '15

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 14/ '15

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 15/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா. 16/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுக்களை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 17/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 18/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 19/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 21 / '15

கௌரவ புத்திக பத்திறண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 22 / '15

கௌரவ புத்திக பத்திறண,— புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா.23/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— யாசகர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா.24/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா.25/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா.26/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலைமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா.27/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா.28/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா.29/'15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா.30/'15

கௌரவ புத்திக பத்திறண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா.31/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா.32/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா.33/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா.34/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா.35/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா.36/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா.37/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா.38/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா.39/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா.40/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா.41/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா.42/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா.43/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா.44/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா. 45/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா. 46/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 47/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 48/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 49/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

41.

பா. 50/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

42.

பா. 51/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

43.

பா. 52/ '15

கௌரவ புத்திக பத்திறண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

44.

பா. 53/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

45.

பா. 54/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

46.

பா. 55/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

47.

பா. 56/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

48.

பா. 57/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

49.

பா. 58/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

50.

பா. 59/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

51.

பா. 60/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

52.

பா. 61/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

53.

பா. 62/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட "உளவியலும் தியானமும்" என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

54.

பா. 63/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

55.

பா. 64/ '15

கௌரவ புத்திக பத்திறண, — ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

56.

பா. 65/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவித்தல்,— சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்மிக்கதும், கண்ணியம் மிக்கதுமான சேவையை வழங்குபவர்களாக ஆக்குவதற்கும் மேலும் இவர்களது வாழ்க்கைத் தொழில் மட்டத்தை உயர்த்துவதற்குமாக சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

57.

பா. 66/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காணி தொடர்பில் வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துதல்,— இலங்கையில் தற்போது போலியான உறுதிகளைத் தயாரித்து காணிகளை விற்பனை செய்யும் மோசடிச் செயலொன்று நடைபெற்று வருவதோடு, இவ்விடயம் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், காணி உரிமை பற்றிய பாதுகாப்பு மேம்படுத்தப்படும் வகையிலும், தவறாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக்கூடிய வகையிலும் வலுவிலுள்ள சட்ட முறைமை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

58.

பா. 67/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் பவளப்பாறைகளை பாதுகாத்தல்,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள பவளப்பாறைகள் மனிதர்களின் செயற்பாடுகளால் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், மேற்படி பவளப்பாறைகளை பாதுகாப்பதற்காக மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு தனிநபர் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் சட்ட வரையறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

59.

பா. 68/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களில் பெண்களை சேவைக்கு அமர்த்துதல்,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி வான்களில் பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியும் சகல பாடசாலை வான்களிலும் பணியாற்றுவதற்கு பெண்கள் அமர்த்தப்படுவதை கட்டாயமாக்குவதற்கான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

60.

பா. 69/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மருந்துப் பொருட்களின் விலையை குறைத்தல்,— இலங்கையினுள் தேசிய ஔடதக் கொள்கையினை பிரகடனப்படுத்தி, ஔடதங்களின் பெயரில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை துரிதமாக ஆரம்பிப்பதன் மூலம் மருந்துப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தலையிடுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

61.

பா. 70/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இணையத் தளத்தின் ஊடாக நடைபெறுகின்ற மருந்துப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட மோசடிச் செயல்களைத் தடுத்தல்,— தற்போது இணையத் தளத்தின் ஊடாக தரமற்ற மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேனிவணப்புப் பொருட்களின் உற்பத்திகள் பாரியளவில் விற்பனை செய்யப்படுவதுடன், இத்தகைய மோசடிச் செயல்கள் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்லிருப்புக்கும் பாரியதொரு அச்சுறுத்தலாகும் என்பதால், இவற்றைத் தடுப்பதற்கான உரிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல் உகந்ததாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

62.

பா. 71/ '15

கௌரவ புத்திக பத்திறண,— விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையின்றி பயிர்ச் செய்கை செய்தல்,— அதிக நச்சுத்தன்மையுடைய விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கையில் தடை செய்து, பழைமைவாய்ந்த முறையில் சூழலுக்குகந்த பயிர்ச்செய்கை முறையொன்றை நாட்டில் அறிமுகம் செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விவசாய விஞ்ஞானிகள் மற்றும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அவர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் ஊடாக மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

63.

பா. 72/ '15

கௌரவ புத்திக பத்திறண,— போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்டெடுத்தல்,— தற்போது இலங்கையில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற போக்கு அதிகரித்துள்ளதால், பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

64.

பா. 73/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை நியமித்தல்,— அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களின் போது தமது நிறுவனங்களை மிகஉயர்ந்த உற்பத்தித்திறன் மட்டத்தை நோக்கி வழிநடாத்தியுள்ள நிறுவனத் தலைவர்களை இனங்கண்டு அவர்களின் அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், அந்நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முறையியல்களை ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் பதிலீடு செய்யக்கூடியவாறு மேற்படி நிறுவனத் தலைவர்களை உள்ளடக்கியதாக தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை தாபித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

65.

பா. 74/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சமுதாய மருத்துவமுறை பற்றிய நிபுணத்துவச் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய பிரிவொன்றான சமுதாய மருத்துவமுறை தொடர்பான நிபுணத்துவத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து துரிதமாக தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

66.

பா.76/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் சந்தைக்கு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, சந்தைப் படுத்துகின்ற மற்றும் அதற்குப் பக்கபலமாக உள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவுக்குக் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, தேவையான வசதிகளை குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்கும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக் கூடிய வகையில் வலுவிலுள்ள சட்ட முறைமையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

67.

பா.77/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நச்சுத்தன்மையற்ற உணவுற்பத்தியை ஊக்குவித்தல்,— உணவுடன் தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை இலக்காகக் கொண்டு, தரத்தில் உயர்ந்ததும், ஆரோக்கியமானதுமான உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஆற்றக்கூடிய சேவை தொடர்பாக விழிப்புணர்வூட்டி, மனோபாவ ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அவ்வாறு நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்தி செய்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு கௌரவப் பட்டத்துடன்கூடிய விருது வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

68.

பா.78/ '15

கௌரவ புத்திக பத்திறண,— முறைகேடான விதத்தில் கைப்பற்றப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல்,— இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறான ஆட்கள் மற்றும் அமைப்புகளால் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளதால், மேற்படி காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் துரிதமாக தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

69.

பா. 79/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆதிவாசி மக்களின் மேம்பாட்டுக்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையினுள் தற்போது வசிக்கும் ஆதிவாசி மக்கள் பற்றிய தனியானதொரு தொகை மதிப்பீட்டை மேற்கொண்டு, அவர்கள் உயிர் வாழ்வதில் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களை முறைசார்ந்த விதத்தில் இனங்கண்டு, அவர்கள் கௌரவமாக வாழக் கூடிய ஒரு சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான சாதகமானதொரு திட்டத்தை, ஆதிவாசிகளின் தலைவர்களும் உள்ளடங்கிய விதத்தில் நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

70.

பா. 80/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் சேதமடைந்த தொல்பொருட்களை பாதுகாத்தல்,— முப்பது ஆண்டு கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவில் அழிவடைந்ததோடு, இருப்பிலுள்ள தொல்பொருட்கள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு தகவல்களை திரட்டுவதையும், குறித்த தொல்பொருட்களை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு தொல்பொருளியலாளர்களை உள்ளடக்கிய கல்விமான்கள் குழுவொன்றை நியமித்தல் உசிதமாகுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

71.

பா.81/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பயிர்ச் செய்கைக்கான உள்நாட்டு விதைகளை பிரபல்யப்படுத்துதல்,— விவசாய இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படாது உள்நாட்டு சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிரிடக்கூடிய உள்நாட்டு விதை வகைகளை இனங்கண்டு அத்தகைய விதைகளை துரிதமாக நாடுபூராவும் பரவலாக்கி இரசாயன நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள், தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

72.

பா. 82/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு மொழிகள் கற்கைக்கான வசதிகளை வழங்கல்,— தனி நபர் அறிவாற்றலை தீர்மானிப்பதற்கு அவரிடமுள்ள மொழியறிவு முதன்மையான காரணியாக அமைவதால் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய முதன்மையான அந்நிய மொழிகளை கற்பதற்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

73.

பா. 83/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அனைத்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படுகின்ற நிதியை மட்டுப்படுத்தல்,— இலங்கையினுள் நடைபெறுகின்ற அனைத்து தேர்தல்களின் போதும் சில வேட்பாளர்கள் பாரியளவில் நிதியை செலவிடுவதுடன், நிதி செலவிட முடியாத போதிலும், நாட்டுக்கு சேவையாற்றக்கூடிய கல்விமான்கள் சிலருக்கு இதனால் பாதகமான நிலைமை ஏற்படுவதன் காரணமாக தேர்தல்களுக்கு செலவிடப்படுகின்ற நிதியின் அளவை மட்டுப்படுத்தக்கூடியவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

74.

பா.84/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருட்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல்,— இலங்கை காலனித்துவ நாடாக காணப்பட்ட காலத்தில் எமது நாட்டிலிருந்து போர்த்துக்கள், ஒல்லாந்து மற்றும் பெரிய பிரித்தானியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்லியல் பெறுமதிமிக்க பொருட்கள் பற்றிய ஆய்வொன்றை நடாத்தி அப்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

75.

பா. 85/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல்,— பிக்குமார்களின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை பேணிப்பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பான நீதிமன்ற விடயங்களுக்காக தனியான பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் அந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் மேற்படி பிக்குமார் நீதிமன்றம் தாபிக்கப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

76.

பா. 86/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்றை நியமித்தல்,— பாராளுமன்றம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் கட்டளைச் சட்டங்களுக்கு திருத்தங்களை முன்வைக்கக் கூடியதுமான சட்ட அதிகாரமுள்ள பிக்குமார்களின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட பொதுநிர்வாகம், சட்டம், வெளிநாட்டலுவல்கள் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள கல்விமான்களான பிக்குமார்களை உள்ளடக்கிய நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

77.

பா. 87/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் காணப்பட்ட நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கும், வாவிகள் தொழில்நுட்பத்திற்கும் புத்துயிரூட்டி பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், கற்கை நெறிகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பில் அறிவு நிறைந்தவர்களை உருவாக்க இயலுமான வகையில் “நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிலையம்” என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் தலையீட்டுடன் ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

78.

பா. 88/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— மகாவம்ச கற்கைக்கான நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கை வரலாற்றின் சுவடாக விளங்கும் மகாவம்சத்தைக் கற்பதற்காக பிக்குமாரின் தலையீட்டுடன் “மகாவம்சக் கற்கை ஆய்வு தேசிய நிறுவனம்” என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

79.

பா. 89/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த விரோத செயற்பாடுகளை தடுத்தல்,— அற நூல்கள் மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்யும் மேன்மையான அறிவைக் கொண்ட சட்ட அதிகாரத்துடன் கூடிய கற்றோர்களைக் கொண்ட சங்க சபையொன்றை தாபிப்பதன் மூலம், ஏதேனுமொரு ஆக்கத்தை வெளியிடுவதற்கு முன்னர் அதனை மேற்படி சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர், சமூகமயமாக்குவதற்கு தகுதியில்லை எனில், திருத்தங்களை சமர்ப்பிப்பதற்கேற்றவாறான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் பௌத்த விரோத செயற்பாடுகள், வெளியீடுகள் இயற்றப்படுதல் மற்றும் பௌத்த தர்மத்தை தொடர்புபடுத்தி பொய்யான வரைவிலக்கணங்கள் தோற்றம் பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

80.

பா. 90/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— தேசப்பற்றுடைய கலைப் படைப்புகளை பாராட்டுதல்,— தேசத்தின் மீது அன்பு மற்றும் சுயமரியாதை ஏற்படும் வகையில் சுதேச மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய கலைப் படைப்புகளை வருடாந்தம் கௌரவிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

81.

பா. 91/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களை ஆரோக்கியமான, உடல் நலம்மிக்க மற்றும் உடலுறுதி கொண்ட பிரஜைகளாக சமூகமயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் தாம் விரும்பும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவதற்கும், நடைமுறை ரீதியிலான ஒழுக்கப் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

82.

பா. 92/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— பௌத்த கலாசார தகவல் நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையினுள் அமைந்துள்ள பௌத்த மதத் தலங்கள், அதனுடன் இணைந்த இடைநேர்விளைவான பிரிவுகள் மற்றும் பௌத்த தேரர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, முறைசார்ந்த ரீதியில் கணனிமயப்படுத்தி, நவீன தொழில்நுட்ப கருவிகள், போதியளவு மனித மற்றும் பௌதீக வளங்கள் நிறைந்த “பௌத்த கலாசார தகவல் நிலையம்” எனும் பெயரிலான நிறுவனமொன்று அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

83.

பா. 93/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அறநெறிப் பாடசாலை பாடநூல்களை காலத்திற்கேற்ப திருத்துதல்,— பரீட்சையை இலக்காகக் கொண்ட,— அறிவை மட்டும் மையப்படுத்திய பாடநூல்களுக்குப் பதிலாக செய்முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட, அறிவை வளர்க்கக்கூடியதான, நாகரிகமானதொரு சமூகம் உருவாக்கப்படுவதை இலக்காகக் கொண்ட பாடநூல்களை புத்திஜீவிகளை உள்ளடக்கிய சபையொன்றின் ஊடாக தொகுத்து அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

84.

பா. 94/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குமுறையாக்கலுக்கான சபையொன்றை நியமித்தல்,— இலங்கையின் கலாசாரத்திற்கும், பண்பாட்டுக்கும், சமூக நல்லிருப்புக்கும் பொருந்தக்கூடிய வகையில் சர்வதேச பாடசாலைகளின் விடயப்பரப்புகளை தேவைக்கேற்ப ஒழுங்குமுறையாக்கக்கூடிய முழுமையான அதிகாரத்துடன் கூடிய சபையொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

85.

பா. 95/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல்,— சுதேச வரலாற்று அறிவு, பண்பாடுமிக்கதன்மை, உற்பத்திச் சாத்தியத்தன்மை, அறிவுடைமை, பாரம்பரிய அறிவு, தேசப்பற்று, ஆரோக்கியம், திறமைமிக்கதன்மை மற்றும் சிறந்த மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகளின் மூலம் பூரணத்துவம்மிக்க வெற்றிகரமான பிரசைகளை உருவாக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட தேசிய கொள்கையின் ஊடாக ஒட்டுமொத்த கல்வித் திட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

86.

பா.96/ '15

கௌரவ புத்திக பத்திறண,— குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய அம்சமொன்றான குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணத்துவத் துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து அவற்றை துரிதமாக தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேற்படி குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்துவதற்குமான திட்டங்களை வகுப்பதற்கும் பொருட்டு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

87.

பா. 97/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆயுர்வேத மருத்துவர்களின் சேவையை வெளிநாடுகளுக்கு வழங்குதல்,— ஆயுர்வேத மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவுசெய்யும் பட்டதாரிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முறைசார்ந்த வேலைத் திட்டமொன்றை அமைத்து நடைமுறைப்படுத்தல் உசிதமாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

88.

பா. 98/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆயுர்வேத மருத்துவச் சட்டத்தை திருத்துதல்,— தற்போது வலுவிலுள்ள காலம் கடந்த ஆயுர்வேத மருத்துவச் சட்டம் மீதான திருத்தமொன்றைக் கொண்டு வந்து ஆயுர்வேத மருத்துவர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து, அந்த தொழிலுக்குரிய கௌரவத்தையும், மகத்துவத்தையும் பாதுகாக்க புதிய ஆயுர்வேத மருத்துவச் சட்டமொன்றை துரிதகதியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

89.

பா. 99/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் புகையிரத பாதுகாப்பு முறைமையை உருவாக்கிய புத்தாக்குநர்களையும், அத் துறையுடன் தொடர்புடைய கல்விமான்களையும், புகையிரதத் திணைக்களத்தின் சகல துறைகளினதும் விற்பன்னர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

90.

பா. 100/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தல்,— பேருந்து பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், வருடாந்தம் அச் சேவையை நிராகரிக்கின்ற சுமார் 1% - 2% பயணிகளை தக்க வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், அச் சேவையின் இருப்புக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

91.

பா. 101/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிங்கள மொழிக்கு நியதியொன்றை வகுத்தல்,— சிங்கள மொழியில் எழுத்து வழக்கு மற்றும் பேச்சு வழக்கு இரு வகைகளை கொண்டுள்ளதோடு, ණ, ඝ, ල, ළ வேறுபாடு, மெல்லின, வல்லின எழுத்துக்களை பயன்படுத்தல் மற்றும் சொல் வகைப்பாடு ஆகியன விவாதத்துக்குரியவையாக உள்ளதால் சிங்கள மொழிக்கென நியதியொன்றை வகுப்பதற்கு கல்விமான்கள் சபையொன்றை நியமித்து காலத்துக்கேற்ப ஏற்படும் மாற்றங்களையும் கவனத்திற்கொண்டு மொழியின் நிலைத்திருத்தலை உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

92.

பா.102/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல்,— பீடை கொல்லிகள் மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்து வெளியேறும் உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்கள் (Persistent Organic Pollutants – POPs ) பன்னிரண்டு வகை மாசாக்கல் காரணிகளை உள்ளடக்கியுள்ளதுடன், இவை மனிதனின் உடல் நலத்துக்கு மிகவும் பாதகமாயுள்ளதால், குறித்த இரசாயனப் பதார்த்தங்கள் சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசார்ந்த ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

93.

பா.103/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அரசாட்சியில் பௌத்த தத்துவங்களை சேர்த்தக்கொள்ளல்,— சப்த அபரிஹானீய தர்ம, தச ராஜ தர்ம, ராஜோவாத ஜாதகய, குரு தர்ம ஜாதகய, கண்ட நிந்துக ஜாதகய, தெசதுர ஜாதகய, தேவதர்ம ஜாதகய, சதர சங்ரஹ வஸ்து, சக்கவத்தீ சிஹநாத சூத்ரய மற்றும் தர்ம பிரதீபிகாவ ஆகிய பௌத்த கற்பித்தல்கள் தொடாபில் பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் பிரதேச மட்டத்திலான சகல ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக நாட்டின் நல்லாட்சிக்கு அவர்களது வகிபாக பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

94.

பா. 104/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலத்திரனியல் கழிவுகளை அகற்றுதல்,— புளோரசன்ட் மின்குமிழ், தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மின் உபகரணங்கள், பட்டரி, கனணி மற்றும் அவற்றின் பாகங்கள் கழிவுப் பொருட்களாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகையில் ஆசனிக், கட்மியம், பாதரசம் மற்றும் ஈயம் ஆகிய கன உலோகங்கள் சுற்றாடலில் சேர்க்கப்படுவதால், குறித்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து சுற்றாடலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

95.

பா. 105/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டில் நல்லாட்சியை தாபித்தல்,— சீரற்ற ஆட்சியின் பண்புகளான தான்தோன்றித்தனமான கொள்கையாக்கம், அதிகாரவாதம், அமுலாக்கப்படாத மற்றும் அநீதியான சட்டங்கள், நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், அரசியலில் பிரஜைகளின் பங்களிப்பு குறைவடைதல் மற்றும் ஊழல் பரவுதல் ஆகிய விடயங்களை எமது நாட்டில் குறைவின்றிக் காணக்கூடியதாக உள்ளதோடு, இதன் காரணமாக நாட்டில் சீரற்ற ஆட்சி நிலவுகின்றமை தென்படுகின்றமையால், நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

96.

பா. 106/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கு சொந்தமான சுவடிகளை மீளப்பெற்றுக்கொள்ளல்,— இலங்கைக்கு சொந்தமான பெறுமதியான பல சுவடிகள் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் காணப்படுவதுடன், இவற்றில் உள்ளடங்கியுள்ள அறிவை தற்போதைய இலங்கை சமூகம் இழந்துள்ளமையால், மேற்படி சுவடிகளை எமது நாட்டுக்கு மீளப் பெற்று இவற்றில் அடங்கியுள்ள புராதன அறிவை சமூகமயமப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது

97.

பா. 107/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதற்காக கமத்தொழிலின் பங்களிப்பைப் பெறுதல்,— தனிப் பயிர்ச்செய்கை முறைக்கு பதிலாக பல்வகைப் பயிர்ச்செய்கை முறை மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை முறையை பிரபல்யபடுத்தல், உயிர் பல்வகைத்தன்மைக்கு கேடு விளைவிக்கும் இரசாயன பதார்த்தங்களை கமத்தொழிலிருந்து நீக்குதல் மற்றும் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக நாட்டில் உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதில் விவாசாயிகளை ஈடுபடுத்துகின்றதான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

98.

பா. 108/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மக்களின் உணவு கிடைக்கும் உரிமையை பாதுகாத்தல்,— ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் கட்டமைப்புக்களுக்கு அமைய உணவு கிடைப்பதற்கான அடிப்படை உரிமையை இலங்கை மக்கள் இழக்கும் நிலைமை, அரசாங்க கொள்கை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதில் காணப்படுவதாலும், மேற்படி சமவாயங்களுக்கு அமைய நாட்டு மக்களின் உணவுப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பு முற்றாக அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாலும் அரசாங்கம் தலையீடு செய்து உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற மற்றும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான உணவு நாட்டு மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்கின்ற முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை வகுத்து மக்களின் உணவு கிடைக்கும் அடிப்படை உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

99.

பா. 109/ '15

கௌரவ புத்திக பத்திறண,— அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல்,— அசேதனப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உள்ளாக்குதலும், அசேதனப் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பதும், உபயோகத்திலிருந்து நீக்கப்படுகின்ற அசேதனப் பொருட்களை சேகரிப்பதற்குமான பொறிமுறையொன்றை அமைத்தல் மற்றும் அசேதனப் பொருட்களை பயன்படுத்துவதற்கான சுற்றாடல் சட்ட, விதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் நன்நிலைத்திருத்தலுக்காக அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

100.

பா. 110/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டல்,— ஆரோக்கியமான தேசமொன்றைக் கட்டியெழுப்பல் மற்றும் சுதேச ஆயுர்வேதத்தின் நன்நிலைத்திருத்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சுதேச மருந்து வகைகள் மற்றும் கைமருந்துகள் பற்றி முறைசார்ந்த விடய விளக்கங்களைக் கொண்ட பாடமொன்றை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

101.

பா. 111/ '15

கௌரவ புத்திக பத்திறண,— தாய், சேய் போஷாக்கின்மையை ஒழித்தல்,— இலங்கையில் எடைகுறைந்த மகப்பேற்று வீதம் 25% எனும் உயர் பெறுமானத்தை கொண்டுள்ளதோடு, அதற்கான பிரதான காரணியாக அமைவது ஊட்டச்சத்துமிக்க உணவுப் பற்றுக்குறையே என்பதால், தாய், சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வறியோர்களுக்கு வழங்குவதை முதன்மையாகக்கொண்ட வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

102.

பா. 112/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் ஆரோக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புதல்,— இன்று இலங்கையில் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்துள்ளமையால் நீர் மற்றும் உணவுகளில் கதிரியக்கத் தன்மை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மனிதனுக்குப் பீடிக்கின்ற ஒருசில நோய்களின் நோய்க் காரணிகளைக்கூட கண்டுபிடிப்பது சிரமமானதாக அமையலாம் என்பதால், இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்காக கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று, அதன் விதப்புரைகளை அமுலாக்குவதன் ஊடாக நாட்டிலுள்ள மக்களின் ஆரோக்கியம் உறுதிசெய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

103.

பா.113/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டின் பாதுகாப்புக்கு கமத்தொழிலைப் பேணுதல்,— முதலாளித்துவத்தின் மூன்றாவது கட்டமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கமத்தொழில் வாழ்க்கை முறையானது பசுமைப் புரட்சியுடன் முழுமையாகவே மாற்றமடைந்த காரணத்தினால் தற்போதைய உலகளாவிய சமூகம் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் மாசடைதல், ஆரோக்கியத்தை இழத்தல் மற்றும் தூய்மையான உணவு காணப்படாமை, ஆகிய இடர்காண் நிலைமைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை நிலைபேறான கமத்தொழில் பிரயோகங்களுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் விவசாயிகளைப் பாதுகாக்கும் அரச கொள்கைகளை நாட்டினுள் தாபிப்பதன் மூலமும் நாட்டின் எதிர்காலம் பேணப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

104.

பா. 114/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சிக்கலான உலகளாவிய சந்தையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்தல்,— உலகமயமாக்கலின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட உலக வர்த்தக முறைகள் மனிதனின் மனதை ஆக்கிரமித்துள்ளதன் காரணமாக அவன் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வந்த ஒழுக்க விழுமியங்களும் வளர்ச்சியடைந்த தத்துவக் கருத்துக்களும் மனித மனங்களிலிருந்து பறித்தெடுக்கப்படுதல் தற்காலத்தில் இலங்கையர்களுக்கும் பொதுவானதென்பதால், சந்தைப் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சிக்கலான வாழ்க்கை முறையையும் அதனைத் தொடர்ந்து எழுகின்ற சிக்கலான சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை முறையொன்றை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவூட்டுவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் அறிவார்ந்த கருத்தாடலொன்றும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

105.

பா. 115/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற்துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

106.

பா. 116/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தைப் பாதுகாத்தல்,— இலங்கையின் ஒட்டுமொத்த சுற்றாடல் முறைமையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கூருணர்வுமிக்க சுற்றாடல் முறைமையொன்றாகிய நக்கிள்ஸ் வன ஒதுக்கமானது தற்போது மனித செயற்பாடுகளின் காரணமாக கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதோடு, இன்றைய சந்ததியினருக்கும் அதேபோன்று எதிர்கால சந்ததியினருக்கும் மேற்படி சுற்றாடல் அழிவின் காரணமாக ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், மனிதர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்களை அகற்றி நக்கிள்ஸ் வன ஒதுக்கத்தின் சுயாதீனமான இருப்பை துரிதமாக உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

107.

பா. 117/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்குகளை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

108.

பா. 118/ '15

கௌரவ புத்திக பத்திறண,— புலமை சார்ந்த வறுமையை ஒழித்தல்,— பௌதீக வர்த்தகப் பொருட்கள் புழங்கும் வேகத்திற்கு நிகராக அறிவு, புலமை மற்றும் மானிட ஒழுக்க விழுமியங்கள் மக்களை சென்றடையாமை காரணமாக அறியாமை தலைதூக்கியுள்ளதன் மூலம், புலமைசார்ந்த வறுமை எமது நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினையாக இருந்த போதிலும் அது தொடர்பாக நாட்டினுள் குறைந்தளவு கவனமே செலுத்தப்படுவதனால் நாட்டு மக்களின் புலமைசார்ந்த வறுமையை இல்லாமல் செய்வதற்காக, சகல வயதுப் பிரிவினரும், உள்ளடங்குகின்ற வகையில் முறைசார்ந்த விதத்தில் திட்டமிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

109.

பா. 119/ '15

கௌரவ புத்திக பத்திறண,— காலாவதியான ஔடதங்கள் பயன்படுத்தப்படுவதைத் தவிர்த்தல்,— தற்போது இலங்கையில் காலாவதியான ஔடதங்கள் சந்தையிலும் அரச வைத்தியசாலைகளிலும் பாவனைக்கு வரும் ஆபத்து காணப்படுவதனால் அரசின் சகல பிரிவினரும் தலையிட்டு செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து காலாவதியான ஔடதங்களை சந்தையிலிருந்து அகற்றுவதற்கும் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

110.

பா. 120/ '15

கௌரவ புத்திக பத்திறண,— எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுத்தல்,— இலங்கையில் தற்போது இனம்காணப்படாத அண்ணளவாக 3000 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாக அறிக்கைகள் வெளியாகியுள்ளதால், அவர்களை இனம்கண்டு சிகிச்சையளிப்பதற்கும், எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் பயனுறுதியானதும், பொருத்தமானதுமான கருத்திட்டமொன்று துரிதமாக ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

111.

பா. 121/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாடுகளில் பாலியல் துஷ்பிரயோகளுக்கு இலக்காகும் பெண்களுக்கு நிவாரணமளித்தல்,— இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிப்பெண் சேவைக்கென வெளிநாடு சென்ற பின்னர் நிகழும் பாலியல் துஷ்பிரயோகங்கள் காரணமாக ஏற்படும் கருத்தரிப்புகளால் இலங்கைச் சமூகத்தில் உருவாகியுள்ள பிரச்சினை நிலைமைகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்து நடைமுறைப் படுத்துவதற்கு கல்விமான்கள் மற்றும் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

112.

பா. 122/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் பாதுகாப்பைத் உறுதிப்படுத்துவதற்கான சட்டங்களை இயற்றுதல்,— அண்மைக் காலமாக இலங்கையிலுள்ள வன ஒதுக்கங்கள் மற்றும் சரணாலயங்களின் அழிவு அதிகரித்து வருவதோடு, இலங்கையின் சுற்றாடல் சமநிலைக்கு அதன் மூலம் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு வருவதால், இந்த அழிவை நிறுத்துவதற்காக மக்களின் மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் அதேபோன்று அமுலிலுள்ள சட்ட ஏற்பாடுகளை முறைசார்ந்ததாக மற்றும் கடுமையானதாக இருக்கக்கூடியவாறு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

113.

பா. 123/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பல்வேறு சமய குழுக்களாலும் ஏற்படுத்தப்படுகின்ற சமூகத் தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்தல்,— பிரதானமான போக்கிலுள்ள சமயக் கருத்தியல்களை விமர்சித்துக் கொண்டு, அச் சமயங்களின் உப பிரிவுகளாக தமது வியாக்கியானங்கள் மற்றும் விளக்கங்களை சமூகமயப்படுத்துகின்றதும், புதிய கருத்தியல்களை முன்வைத்து, அக் கருத்தியல்களை ஏற்றுக்கொள்கின்ற ஆட்களை அணிதிரட்டுகின்றதுமான, சமய மற்றும் வேறு தோற்றங்களில் சமூகமயமாகி இருக்கின்ற குழுக்கள் தொடர்பாக ஆராய்ந்து அவர்களுடைய கருத்தியல்கள், செயற்பாடுகள் மற்றும் சமூகத்திற்கு அவர்களால் ஏற்படுகின்ற தாக்கங்கள் எவ்வாறானவை என்பதைப் பற்றிய மதிப்பீடொன்றை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சமயத் தலைவர்கள் மற்றும் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்து, அறிக்கையொன்றைப் பெற்று அதன் விதப்புரைகளை செயற்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

114.

பா.124/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உயர் தரத்திலான மட்பாண்டங்களை உற்பத்தி செய்தல்,— சமையலின் போது எரிவாயு மற்றும் மின்சாரம் விரயமாகாத வகையில் துரிதமாக வெப்பத்தை உள்ளீர்த்துக்கொள்ளக்கூடிய மட்பாண்டங்களை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்குவதற்குத் தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மட்பாண்டங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான முறையில் உணவு சமைக்கக்கூடிய இயலுமை தொடர்பாகவும் மக்களுக்கு விழிப்புணர்வூட்டுகின்ற தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேணடுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

115.

பா. 125/ '15

கௌரவ புத்திக பத்திறண,— ஆன்மீக உளவியல் துறைக்கு பௌத்த தர்மத்திலிருந்து செல்வாக்கைப் பெற்றுக்கொள்ளல்,— உள்ளம் பற்றிய புத்தபிரானின் ஒருசில விளக்கங்கள் நவீன விஞ்ஞானத்தாலும் கண்டறிய இயலாத அளவுக்கு ஆழமானதாக உள்ளதால், அது பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும் நிகழ்காலத்தில் ஆன்மீக உளவியல் துறையில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பௌத்த தர்மத்தைத் தழுவியதான வரைவிலக்கணங்களையும் தீர்வுகளையும் முன்வைக்கக்கூடிய வகையில், சம்பந்தப்பட்ட துறை பற்றிய பரந்த அறிவுபடைத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கல்விமான்களைக் கொண்ட குழுவொன்றைத் தாபித்து, அதனூடாக பௌத்த தர்மத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பிரபல்யப்படுத்தவும், இலங்கையின் நற்பெயரை மேம்படுத்தவும், ஆன்மீக உளவியல் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் அரசாங்கம் இடையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

116.

பா. 126/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துதல்,— கற்றறிவாளர் மத்தியில் தொல்பொருளியல் விடயத்தைப் பிரபல்யப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் மேற்படி பாடத்தைச் சேர்த்துக் கொள்வதையும் பல்கலைக்கழகங்களில் தொல்பொருளியல் விடயப்பரப்பை தொடர்ந்தும் விஸ்தரிப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதையும், அதன் மூலம் தொல்பொருளியல் விடயத்துறையை நாடெங்கினும் பரப்புவதன் மூலம் உருவாகின்ற கல்விமான்களிடமிருந்து சாதகமான சேவையை பெற்றுக்கொள்வதையும் நோக்கமாகக் கொண்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை நீண்டகால ரீதியில் திட்டமிட்டு உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்மென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

117.

பா. 127/ '15

கௌரவ புத்திக பத்திறண,— உணவு வகைகளில் உள்ளடங்கியுள்ள நச்சுத்தன்மையைப் பற்றி ஆராய்வதற்காக விஷேட தரநிர்ணய நிறுவனமொன்றை தாபித்தல்,— கமத்தொழிலின் போது பயன்படுத்தப்படும் இரசாயன பதார்த்தங்களின் காரணமாக உணவுப் பொருட்களிலும் நச்சுத்தன்மை கலந்துள்ளதுடன், இது பற்றி கண்டறிவதற்கு ஏற்புடைய தரநிர்ணய நிறுவனமொன்று ஏற்கனவே இலங்கையினுள் நிறுவப்படாமையினால் இவ்விடயத்திற்கென விஷேட தர நிர்ணய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

118.

பா. 128/ '15

கௌரவ புத்திக பத்திறண,— யாசகர்கள் யாசிப்பதற்குப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல்,— இலங்கையில் யாசகர்கள் சிறுவர்களுடன் யாசிப்பதைத் தடை செய்து, யாசிப்பதற்காகப் பயன்படுத்துகின்ற சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களை சிறந்த பிரசைகளாக சமூகமயப்படுத்தத் தேவையான தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

119.

பா.129/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— மஹா பிரஜாபதி கோதமி பிக்குணீயுடன் தொடங்கிய பாரத பிக்குணீகள் சாசனம் சங்கமித்தா பிக்குணீயின் இலங்கை வருகை மூலமாக இலங்கையில் நன்கு தாபிக்கப்பட்டபோதிலும், பிற்காலத்தில் மறைவடைந்தமையால், அண்மைக்காலத்தில் சியாமோபாலீ மஹா நிக்காயவின் ரங்கிரி தம்புலு தரப்பினரால் மீளவும் தாபிக்கப்பட்டதோடு, அவ்விதமாக தாபிக்கப்பட்ட பிக்குணீகள் சாசனத்திற்கு முறைசார்ந்த அங்கீகாரத்தை வழங்குவதற்காக அரசாங்கம் மூன்று பீடங்களையும் சேர்ந்த மகாநாயக்க தேரர்களை உள்ளிட்ட ஏற்புடைய அனைத்து துறைகளினதும் தலைமையில் சரியான உரையாடலை ஆரம்பிக்க வேண்டுமெனவும், அவ்வுரையாடலின் இறுதியில் முறைசார்ந்த வழிமுறையொன்றின் ஊடாக இலங்கையில் பிக்குணீகள் சாசனத்தை இடையறாமல் பேணிவருவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

120.

பா.130/ '15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பினை கட்டமைப்பு ரீதியாக ஒழுங்கமைத்தல்,— இலங்கை பிக்குமார் கூட்டமைப்பில் பிக்குமார்கள் தரப்பிரனர்களாக பிரிந்துள்மையால் கட்டமைப்பு ரீதியாக ஒழுங்கமையாதுள்ளதோடு, அதன் காரணமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சடங்குமுறைகளில் பிக்குமார்கள் ஏகோபித்த நிலையில் இல்லாமை நாட்டுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதால் ஒட்டுமொத்த பிக்குமார் சமூகத்திலும் ஏகோபித்தநிலையினை ஏற்படுத்தக்கூடிய வேலைத்திட்டமொன்றினை தயாரிக்க அரசாங்கம் தலையீடு செய்யவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

121.

பா.131/'15

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுதல்,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மக்கள் நேயமிக்கதான முறையில் அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான திட்டங்களை தயாரிப்பதற்காக கல்விமான்கள் சபையொன்றை நியமிப்பதற்கும் அவர்களுடைய பரிந்துரைகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தில் நிலவும் ஊழல், மோசடி மற்றும் நிருவாகப் பிரச்சினைகளை தீர்த்து பயனுறுதியான ஒரு தேசிய நிறுவனமாக இயங்குவதற்குத் தேவையான சூழலை அரசாங்கம் தலையீடுசெய்து உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

122.

பா.132/'15

கௌரவ புத்திக பத்திறண,— மருந்தாக்கலுக்கு தேவையான அளவு கஞ்சாவை பயிரிடுவதற்கு சுதேச மருத்துவர்களுக்கு அனுமதி அளித்தல்,— இந்தியாவிலிருந்து இரகசியமான வழிகளின் ஊடாக நாட்டினுள் கொண்டுவரப்படுகின்ற இராசயனப் பொருட்கள் கலந்த கஞ்சாவை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற சுதேச மருந்துகளின் தரம் குறைவடைவதால், ஆயுர்வேத மருந்துகளை உற்பத்தி செய்கின்றபோது, தமது மருந்துகளின் தரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக, கஞ்சாவை அத்தியாவசிய ஔடதமாக பயன்படுத்தும் அரச அங்கீகாரம் பெற்ற ஆயுர்வேத மருத்துவர்களுக்கு கட்டுப்பாடுகளுடன் கஞ்சா தாவரத்தை பயிரிடுவதற்கு அனுமதி அளிப்பதற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

123.

பா.133/'15

கௌரவ புத்திக பத்திறண,— மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுத்தல்,— மரக்கறி மொத்த வியாபாரத்தில் நிகழும் கப்பம் பெறுதல் மற்றும் விலையை தீர்மானித்தல் முதலிய செயற்பாடுகளின் ஊடாக கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒழுங்கமையப் பெற்ற வர்த்தக தனியுரிமையினால் மரக்கறிச் செய்கையாளர்களுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதற்காக இற்றைவரை அமுலாக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் தோல்வியடைந்திருப்பதால், விவாசாயிகளுக்கு நியாய விலையை பெற்றுக்கொடுப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்ட, அழுத்தங்களற்ற சந்தையொன்றினை அரசாங்கத்துறை வர்த்தக நிறுவனங்கள் தலையீடு செய்து உருவாக்கிச் செயற்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

124.

பா.134/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் முக்கியத்துவத்தை சமூகமயமாக்கல்,— பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பாடசாலை வான் சாரதிகளுக்கு பிள்ளைகளின் முக்கியத்துவம் பற்றி சமூகவியல் மற்றும் உளவியல் முறையியல்களைக் கொண்டு எளிதாக விளக்கி, நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக பிள்ளைகளை சமூக சவால்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பதைப் பற்றிய கலந்துரையாடலொன்றை நடத்துவதற்காக தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

125.

பா.135/'15

கௌரவ புத்திக பத்திறண,— பெண்களுக்கான ஒடுக்குமுறைகளைக் குறைத்தல்,— இன்றைய உலகளாவிய சமூகத்தில் பெண்களுக்கு நேரிடுகின்ற தொல்லைகளான தொழில் மற்றும் பாலியல் சுரண்டலுக்கு ஆளாதல், தனியார் சொத்துரிமை முறை ஆண்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளமை, சமமாகக் கருதப்படாமை மற்றும் குடும்ப அமைப்பினுள் சிறைப்பட்டுள்ளமையின் காரணமாக தொழில்பெயர்ச்சிக்கு தடைஏற்படுதல் ஆகிய விடயங்கள் இலங்கைப் பெண்களுக்குப் பொதுவானவையாக உள்ளதால், அவர்களின் நல்லிருப்புக்காக இந்த அசௌகரியமான சூழலை சீராக்கி நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

126.

பா.136/'15

கௌரவ புத்திக பத்திறண,— தொல்பொருளியல் திணைக்களத்தை மேம்படுத்தல்,— இலங்கையினுள் அமையப்பெற்றுள்ள தொல்பொருள்களை பேணிக்காப்பதற்கான ஆற்றல் தொல்பொருளியல் திணைக்களத்திடம் இல்லாமைக்கான காரணம் தற்போது நிலவுகின்ற மனித மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறையாகும் என்பதால், கல்விமான்கள் குழுவொன்றின் மூலம் தொல்பொருளியல் திணைக்களத்திலுள்ள குறைபாடுகள் பற்றி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

127.

பா.137/'15

கௌரவ புத்திக பத்திறண,— தூரப் பயணச் சேவை பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் ஆரோக்கியமான உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்தல்,— தூரப் பயணச் சேவை பேருந்துகள் உணவு, குடிபானங்களை பெற்றுக்கொள்வதற்கு நிறுத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகளின் தரம் மிகக் கீழ் மட்டத்தில் உள்ளதால் பயணிகளின் ஆரோக்கியத்திற்கு பாதகமானதாயுள்ளதோடு, மேற்படி சிற்றுண்டிச் சாலைகளின் தரத்தை உயர்த்துவதற்காக எப்போதும் பின்னாய்வு செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

128.

பா.138/'15

கௌரவ புத்திக்க பத்திறண,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகளை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுதல்,— அரசாங்கத்திற்கு சொந்தமான பெருந்தோட்ட கம்பனிகள் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களாக மாறியுள்ளதால், கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து மேற்படி நிறுவனங்களின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்குத் தேவையான விதப்புரைகளை தயாரித்து, அவ்விதப்புரைகளை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக மேற்படி கம்பனிகளின் இலாபகரத்தன்மையை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

129.

பா.139/'15

கௌரவ புத்திக பத்திறண,— பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோதச் செயல்களை நிறுத்தல்,— இலங்கையின் பாதுகாக்கப்பட்ட வனங்களினுள் இடம்பெறுகின்ற சட்டவிரோத பயிர்ச்செய்கை, பல்வேறு நிர்மாணிப்புக்கள், காடுகளை வெட்டித்துப்புரவாக்கல் மற்றும் பாதுகாப்பு வன எல்லைகளை மாற்றியமைத்தல் ஆகியன அழிவுக்கு காரணமாக அமைகின்ற மனித செயற்பாடுகளின் சுற்றிவளைப்புக்கு விசேடமாக வலுவூட்டப்பட்ட பொலிஸ் வனப்பாதுகாப்புப் பிரிவொன்றை தாபிக்க அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

130.

பா.140/'15

கௌரவ புத்திக பத்திறண,— பவளப் பாறைகளை பேணிப்பாதுகாத்தல்,— கடல்நீரின் வெப்பநிலை அதிகரித்தல் மற்றும் மனிதசெயற்பாடுகள் காரணமாக பவளப்பாறைகள் அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதால் இலங்கைக் கடல் வலயத்தைச் சூழவுள்ள பவளப்பாறைகளைப் பாதுகாப்பதற்கும், புதிய பவளப்பாறைகள் உருவாவதற்குப் பொருத்தமான சூழல் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் தேவையான புதிய ஒழுங்குமுறைப்படுத்தல்களை தயார்செய்து அமுல்படுத்துவற்கு அரசாங்கம் தலையீடுசெய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

131.

பா.145/' 15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அரச நிறுவனங்களினால் பொதுமக்களுக்கு ஏற்படும் துர்செயல்கள் பற்றி ஆராய்வதற்கான ஒரு நிறுவனத்தை தாபித்தல்,— பல்வேறுபட்ட சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அரச நிறுவனங்களுக்கு வருகைதரும் பொதுமக்களுக்கு ஏற்படும் முறையற்ற செயல்கள் மற்றும் அநீதிகளை ஆராய்வதற்காகவும், குறித்த அநீதிகளை விசாரிப்பதற்காகவும் சட்டத் தத்துவத்துடன் கூடிய நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

132.

பா.150/'15

கௌரவ ஹேஷான் விதானகே,— பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான ஒழுங்கான முறையியலொன்றை தயாரித்தல்,— இலங்கையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகின்றபோது இதுவரை காலமும் நடைமுறையிலிருந்த கட்சி, நிற பாகுபாட்டு முறையை புறக்கணித்துவிட்டு, நியாயத்தை நிலைநாட்டுவதற்காகன ஒழுங்கான முறையியலொன்றை திட்டமிட்டு, அதனை ஒரு கொள்கையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அரசியல்வாதிகளின் முன்னிலையில் பட்டதாரிகள் இழிவாக நடத்தப்படாத வகையில் செயலாற்றுதல் வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

133.

பா.151/'15

கௌரவ ஹேஷான் விதானகே,— தோட்டங்களைச் சார்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்,— தோட்டங்களைச் சார்ந்து தமிழ் மக்கள் வாழும் சுற்றுச்சூழலில் மின்சாரம், நீர் வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், இந்நிலைமையானது பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும், இம்மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதால், இந்த லயன் வீட்டுக் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, இதற்குப் பதிலாக புதிய முறைசார்ந்த தனி வீட்டுத் திட்டமொன்றை தயாரிப்பதற்குத் தேவையான துரித வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

134.

பா.155/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— 12 ஆண்டுகள் இராணுவ கடமைகளில் ஈடுட்டிருந்த முப்படைவீரர்களுக்கு ஓய்வூதியம் பெற்றுக்கொடுத்தல்,— இலங்கை முப்படைச் சேவையில் 22 ஆண்டுகள் பூர்த்தியடைந்த பின்னர் ஓய்வு பெறக்கூடிய வழிமுறையொன்று நடைமுறையில் உள்ளதால், வடக்கு கிழக்கில் இராணுவ நடைவடிக்கைக் கடமையில் 12 ஆண்டு காலம் தொடர்ச்சியாக சேவையாற்றிவிட்டு இச்சேவைகளிலிருந்து நீங்கியுள்ளவர்கள் தற்சமயம் மிக நிர்க்கதி நிலையில் உள்ளதால் மேற்படி முப்படை மற்றும் பொலிஸ் சேவையில் கடமையாற்றியவர்களுக்கு பகுதியளவு ஓய்வூதியமொன்றை பெற்றுக்கொடுக்கும் வழிமுறையொன்றை விரைவில் தயாரித்து இவர்களுக்கு நிவாரணம் வழங்குவது உசிதமாகுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

135.

பா.156/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி நகரில் காணப்படும் வாகன நெரிசலை குறைத்தல்,— இலங்கையின் இரண்டாவது தலைநகரான கண்டி நகர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களின் சுற்றுலா நிலையமாக காணப்படுவதாலும், கண்டி நகருக்கு அன்றாடம் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை தருவதுடன் இம்மக்கள் கண்டி நகரிலும் அண்மித்த வீதிகளிலும் உள்ள அதிக வாகன நெரிசல் காரணமாக பெரும் சிரமத்திற்கு உள்ளாவதாலும், கண்டி நகரில் வாகன நெரிசலை குறைப்பதற்காக துரித தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

136.

பா.157/'15

கௌரவ லக்கி ஜயவர்த்தன,— கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை ஆரம்பித்தல்,— கண்டி மாவட்டத்தில் பெருமளவிலான முஸ்லிம் மக்கள் வாழ்வதுடன், கண்டி நகரை அண்மித்தாக முஸ்லிம் ஆண்கள் பாடசாலையொன்றை அமைக்க வேண்டுமென்பது இப்பிரதேச மக்களினது நீண்ட கால கோரிக்கையாகவும் அமைந்துள்ளமையால், மிக விரைவில் கண்டி நகரத்தில் முஸ்லிம் ஆண்கள் கல்லூரியொன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

137.

பா.158/'15

கௌரவ லக்கி ஜயவர்த்தன,— கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல்,— கண்டி நகருக்கு அண்மையிலுள்ள பிரபல்யமிக்க பாடசாலைகளின் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு பெரும் தொகையானோர் விண்ணப்பித்த போதிலும், இப்பாடசாலைகளில் இடவசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பிள்ளைகளை அனுமதித்தல் மிகவும் சிரமமானதாக அமைந்துள்ளமையால், கண்டி நகரை அண்மித்துள்ள முதன்மையான பாடசாலைகளுக்கு, முதலாவது தரத்துக்கான வகுப்புக்களை நடாத்துவதற்காக புதிய கட்டிடங்களை மிக விரைவில் நிர்மாணித்துக்கொடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

138.

பா 159/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— கண்டி பல்லேகலே சுதந்திர வர்த்தக வலயத்தை முறைசார்ந்த விதத்தில் விரிவுபடுத்தல்,— கண்டி மாவட்டத்தில் தொழில் வாய்ப்பின்றி பெருமளவிலான இளைஞர் யுவதிகள் இருக்கின்ற காரணத்தினால், இவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை துரிதமாக வழங்குவதற்காக கண்டி பல்லேகலே பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு சுதந்திர வர்த்தக வலயங்களையும் முறைசார்ந்ததாக அமைத்து அதிகமானோருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுப்பதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

139.

பா 160/'15

கௌரவ லக்கி ஜயவர்தன,— மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள தாபித்தல்,— ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் நிர்க்கதி நிலைக்குள்ளான மலைநாட்டில் வாழும் மக்களுக்கு நிவாரணமளிக்கும் பொருட்டு தாபிக்கப்பட்டிருந்த மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழு கடந்த ஆட்சிக் காலத்தின்போது செயலிழக்கச் செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மலைநாட்டு மக்களுக்கு நேர்ந்துள்ள அநீதிகளுக்கு நீதி வழங்குவதற்காக மலைநாட்டு கிராமிய புனர்வாழ்வளிப்பு ஆணைக்குழுவை மீள முறைசார்ந்த விதத்தில் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

140.

பா. 178/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— யுத்தத்தின்போது உயிரிழந்த மக்களை நினைவுகூர்வதற்காக நினைவுத்தூபியொன்றை அமைத்தல் மற்றும் நினைவுகூர்வதற்கான பொதுத் திகதியொன்றைக் குறித்தொதுக்குதல்,— வட மாகாணத்தில் கடந்த பல தசாப்தங்களாக காணப்பட்ட யுத்த நிலவரம் நீங்கி அமைதியானதொரு வாழ்க்கை முறைக்கு மக்கள் பிரவேசித்துள்ளதோடு, கடந்த காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலைமையின் காரணமாகவும், யுத்த நிலவரம் காரணமாகவும், படுகொலைக்கு உள்ளான அனைத்து இன, மத மற்றும் சமூகங்களைச் சேர்ந்த, சகல மொழிகளையும் பேசுகின்ற மக்களை இலங்கையர்களாக நினைவுகூர்ந்து, அம்மக்கள் தாய் நாட்டுக்காக மேற்கொண்ட தியாகங்களுக்கு மதிப்பளிப்பதற்காக, வட மாகாணத்தின் ஓமந்தைப் பிரதேசத்தில் பொருத்தமானதோர் இடத்தில் "நினைவுத்தூபியொன்றை"அமைப்பதற்கும், மேற்படி யுத்த நிலவரம் காரணமாக உயிரிழந்த சகல இன, மத மற்றும் மொழிகளைப் பேசுகின்ற மக்களை நினைவுகூர்வதற்காக பொருத்தமான திகதியொன்றை பெயரிட்டு ஒவ்வோர் ஆண்டும் அத்தினத்தைக் கொண்டாடுவதற்கும் அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

141.

பா. 168/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— இனங்களுக்கிடையே தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

142.

பா. 169/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,- புதிய விளையாட்டுத்துறைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,- மாவட்ட விளையாட்டுக் கழகங்களின் வாக்குளால் விளையாட்டுக் கட்டுப்பாட்டு சபைகளுக்கு உத்தியோகத்தர்கள் தெரிவு செய்து நியமிக்கப்படும் முறைக்கு பதிலாக புதியதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் மேற்படி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பில், பொது பொதுமக்களுக்கு அல்லது பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூறும் வகையில் இலங்கையில் விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்துக்கும் மேம்பாட்டுக்குமென புதியதொரு சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

143.

பா.177/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— ஹஜ் யாத்திரை சட்டமொன்றை அறிமுகப்படுத்துதல்,— இலங்கையிலிருந்து வருடம்தோறும் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற ஹஜ் யாத்திரிகர்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்காகவும், அது தொடர்பாக நிறுவனக் கட்டமைப்பொன்றை தாபித்து சட்ட ஏற்பாடுகளை வகுப்பதற்காகவும் அரசாங்கத்தினால் "ஹஜ் யாத்திரைச் சட்டம்" ஒன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

144.

பா.163/ '15

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— வட மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் பதில் கடமையாற்றும் அதிபர்களை பாடசாலை அதிபர்களுக்கான போட்டிப்பரீட்சையில் இருந்து விடுவித்து அந்த உத்தியோகத்தர்களை பாடசாலை அதிபர் சேவையின் தரம் III இற்கு நியமித்தல்,— வட மாகாண சபையின் கீழுள்ள பாடசாலைகளில் நீண்ட காலமாக சேவையாற்றி வருகின்ற இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த பதில் கடமையாற்றும் அதிபர்களின் சேவை மூப்பு மற்றும் திறமை என்பற்றை அடிப்படையாகக் கொண்டு, இலங்கை பாடசாலை அதிபர் சேவையின் போட்டிப் பரீட்சையிலிருந்து விடுவித்து அந்த உத்தியோகத்தர்களை இலங்கை அதிபர் சேவையின் III ஆம் தரத்திற்கு நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

145.

பா.179/'16

கௌரவ சிசிர ஜயக்கொடி,— போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான அதிகாரசபையொன்றைத் தாபித்தல்,— போதைப் பொருட்களுக்கு அடிமையான எமது நாட்டின் பெருமளவு இளைஞர்கள் அதிலிருந்து விடுபடும் எதிர்பார்ப்புடன் உள்ள போதிலும், அதற்கான உறுதியான வேலைத்திட்டமொன்று அல்லது முறையியலொன்று இல்லாமை, அவர்கள் எதிர்நோக்குகின்ற பெரும் பிரச்சினையாக உள்ளதால், சமயத் தலைவர்களின் தலைமையில் பௌத்த மதரீதியான ஆன்மீக தியான முறைகள், உள்நாட்டு மருத்துவ முறைகள் மற்றும் வேறு சிகிச்சை முறைகளையும் பயன்படுத்தி போதைப் பொருட்கள் மற்றும் மதுபானம் ஆகியவற்றுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான அதிகாரசபையொன்றைத் தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

146.

பா. 180/ '16

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— இபோச மற்றும் தனியார் பஸ் வண்டிகளுக்கு நாடு முழுவதிலும் ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டமொன்றை இரவு நேரங்களில் அமுல்படுத்தல்,— இலங்கை முழுவதிலும் மாலை 6 மணியின் பின்னர் இபோச மற்றும் தனியார் பஸ் வண்டிகளை முறையாக போக்குவரத்தில் ஈடுபடுத்தாமை காரணமாக பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதால், அதற்குத் தீர்வாக இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் மாகாண சபைகளின் கீழ் இயங்கி வருகின்ற வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நிறுவனங்களுடன் இணைந்து இபோச மற்றும் தனியார் பஸ் வண்டிகளுக்காக இரவு நேரங்களில் நாடு முழுவதிற்குமான ஒருங்கிணைந்த போக்குவரத்துத் திட்டமொன்றைத் தயாரித்து அமுல்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

147.

பா.181/ '16

கௌரவ அப்துல்லாஹ் மஹ்ரூப்,— வட மாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்தல்,— வட மாகாணத்தில் நூற்றாண்டுகளாக வாழ்ந்த முஸ்லிம் சமூகம், 1990 இல் தமது சொத்துக்களையும், உடைமைகளையும் கைவிட்டு தமது உயிருக்கு எவ்வித உத்தரவாதமும் அற்ற நிலையில், நாற்பத்தெட்டு மணித்தியாலங்களில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இச்சிறுபான்மை மக்கள் வெளிநாடு சென்று நாட்டைக் காட்டிக் கொடுக்காமல் தொடர்ச்சியாக இங்கு வசித்துவருவதாலும், கடந்த சனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்கள் ஆகியவற்றில் 95% வாக்குகளை அளித்துள்ளதாலும், இருப்பினும் அவர்கள் இதுவரை தாம் ஆரம்பத்தில் வாழ்ந்த இடங்களுக்கு மீளத் திரும்ப முடியாத நிலை காணப்படுவதாலும், இவர்கள் மீளக்குடியமர்த்துவது தொடர்பில் காணப்படும் சகல விதமான முட்டுக்கட்டைகளையும் இனங்கண்டு அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்கள் ஆரம்பத்தில் வாழ்ந்த இடங்களில், சகல உரிமைகளுடன் மீள் குடியேறுவதற்கு அனுமதித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

148.

பா.182/ '16

கௌரவ அப்துல்லாஹ் மஹரூப்,— பாடசாலைகளுக்கு பட்டதாரிகளை உளவள அலுவலகர்களாக ஆட்சேர்ப்புச் செய்தல்,— நாடளாவிய ரீதியில் இடம்பெறும் பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகிய குற்றச் செயல்களை இல்லாதொழிக்கும் முகமாக நாடளாவிய ரீதியில் சகல பாடசாலைகளிலும் உள்ள ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர்தர மாணவர்களுக்கு, அவர்களின் கல்விச் செயற்பாடுக்குச் சமாந்தரமாக வழிகாட்டுவதற்கு பிரதேச செயலகங்களில் தற்போது இணைந்து பணியாற்றுகின்ற உளவள அலுவலர்களின் பணிகளுக்கு ஒப்பான அலுவலர்களைப் பணிக்கு அமர்த்துவதற்கான செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தி மேற்குறிப்பிட்ட அலுவலரைப் போன்று பட்டதாரிகளை ஒவ்வொரு பாடசாலைக்கும் உள்ளீர்ப்புச் செய்து 2016 ஆம் ஆண்டு முதல் அமுலுக்குவரும் வகையில் விசேட நியமனங்களை வழங்குவதால் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்க முடியுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

149.

பா.183/ '16

கௌரவ அப்துல்லாஹ் மஹரூப்,— ஒரு மில்லியன் வேலைவாய்ப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இளைஞர்களுக்கு முன்னுரிமை அளித்தல்,— ஒரு மில்லியன் வேலைவாய்ப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்தும் போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் முப்பத்தைந்து தொடக்கம் நாற்பத்தைந்து வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் சிரேஷ்ட இரண்டாம் நிலை மட்டங்களில் பாடசாலையை விட்டு விலகிய மற்றும் க.பொ.த. (சா/த) தகைமைகளுடன் இருபது வருடங்களுக்கு மேலாக பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளோரின் உயர்கல்வித் தகைமைகளைப் பரிசீலிக்காது நிரந்தர அந்தஸ்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

150.

பா.184/ '16

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

151.

பா.185/'16

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற கற்கை நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கை மற்றும் பல்வேறுபட்ட நாடுகளின் பாராளுமன்ற நடைமுறைகள், பாராளுமன்ற வரலாறு மற்றும் அரசியல் முறையியல்கள் குறித்து பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் ஏனைய கல்விபெறுவோர்களுக்கு கற்பதற்கான வசதிகளை வழங்கக்கூடிய வகையிலான கற்கை நிலையமொன்று பாராளுமன்றத்தினுள் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

152.

பா.186/'16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,- முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்துச் சட்டத்தை திருத்துதல்,- இலங்கையில் தற்போது நடைமுறையிலிருக்கும் முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டம், இஸ்லாம் மதத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை கோட்பாடுகளுக்கு இணங்குகின்றவாறு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

153.

பா.189/ '17

கௌரவ அசோக் பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தை தேசிய சகவாழ்வினதும் நல்லிணக்கத்தினதும் மாவட்டமாக பெயரிடுதல்,- புத்தளம் மாவட்டத்தில் பௌத்த, கத்தோலிக்க, முஸ்லிம் போன்ற பல்வேறு இனக்குழுக்கள் பல ஆண்டுகள் தொடக்கம் மிகவும் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்கின்றமையால், தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதான நோக்கமான சகவாழ்வை மென்மேலும் மேம்படுத்தும் பொருட்டு இந்த மாவட்டத்தை தேசிய சக வாழ்வினதும், நல்லிணக்கத்தினதும் மாவட்டமாக பெயரிட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

154.

பா.190/ '17

கௌரவ (திருமதி) ரோஹிணி குமாரி விஜேரத்ன,— முன்பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நாட்டுக்குப் பயனுள்ள சிறந்த மனிதர்களை உருவாக்கும் முக்கிய களமாகவிருக்கும் முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் பாரிய எண்ணிக்கையில் நாடெங்கிலும் உள்ள போதிலும், அவற்றில் பெரும்பாலானவை உரிய தரம் மற்றும் முறையியலின்றி பேணப்படுவதால், பிள்ளைகளின் ஆளுமை விருத்தியிலும், விழுமியங்கள் மற்றும் அடிப்படைக் கல்வி ஒழுங்குமுறைப்படுத்தலிலும், எதிர்மறையான நிலை தென்படுவதால் முன்பள்ளி கல்வி நிலையங்களில் பௌதீக வசதிகளைப் பேணுதல், தகைமை வாய்ந்த முன்பள்ளி நிருவாகிகளை நியமித்தல், கற்பித்தல் செயற்பாட்டின் தரத்தைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்களை பயிற்சிப் பாட நெறிகளுக்கு ஆற்றுப்படுத்தல் மற்றும் முன்பள்ளி நிருவாகிகளுக்கு நிச்சயிக்கப்பட்ட சம்பளம்/ படிகள் வழங்குவதன் ஊடாக அவர்களின் எதிர்கால பாதுகாப்பை ஏற்படுத்தி, முன்பள்ளி கல்வியைக் கட்டியெழுப்புவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுத்தமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# 2017 யூன் 20, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

892/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— உள்நாட்டலுவல்கள்அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மதவாச்சி பிரதேச செயலாளர் பிரிவில், துலா வெல்லிய கிராமத்தை சார்ந்து வாழும் "வன்னி சிங்கள" என்ற இனம் பற்றி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கிராமத்தைத் தவிர இவ்வின மக்கள் வாழும் வேறு கிராம அலுவலர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) யுத்த காலத்தில் பல்வேறு பாதிப்புக்களை சந்தித்த இம்மக்கள் வாழும் கிராமங்களில் அடிப்படை தேவைகள் குறைந்த மட்டத்தில் நிலவுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) இவ்வசதிகளை துரிதகதியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மக்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

(iii) இம்மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1112/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சுக்குச் சொந்தமான திணைக்களங்கள், அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நியதிச் சட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலும் கடமையாற்றுகின்ற மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) 2015 இல் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின், மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஆட்சேர்க்கப்பட்ட மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) தற்போது மேற்படி நிறுவனங்களில் வெற்றிடங்கள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், எதிர்காலத்தில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்படும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1268/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மொணறாகலை மாவட்டத்தின்,

(i) தேசிய பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஒட்டுமொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மாகாணசபைக்குச் சொந்தமான ஏனைய பாடசாலைகளில் சேவையாற்றுகின்ற ஒட்டுமொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iii) பாடசாலைகளில் தற்போது கல்வி கற்கின்ற ஒட்டுமொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iv) ஒவ்வொரு பாடத்திற்கும் உள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி (iv) இன் பிரகாரம் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு பாடசாலையிலும் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1391/ '16

கௌரவ பந்துல குணவர்த்தன,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் நீரின வளர்ப்பு வலயமொன்றைத் தாபிக்கின்ற பாரிய கருத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் 151 ஆம் இலக்க முன்மொழிவுக்கு அமைய ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ஆண்டு இறுதியாகின்றபோது பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகளின் ஏக்கர் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்கான கருத்திட்ட அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) 2017 ஆம் ஆண்டில் இவ்வாறான நீரின வளர்ப்பு வலயங்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1509/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு வெளிநாடுகளில் தொழில் புரிந்த இலங்கையர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2014.12.31 மற்றும் 2015.12.31 ஆம் திகதிகளுக்கு ஒப்பீட்டளவில் 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

6.

1548/ '17

கௌரவ இம்ரான் மஹரூப்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சிறியளவிலான நீர்ப்பாசன அபிவிருத்திக்காக திருகோணமலை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள், ஒவ்வொரு கமநல சேவைப் பிரிவு மற்றும் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யப்பட்ட குளங்கள் மற்றும் அதற்காக செலவு செய்யப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அபிவிருத்தியின் காரணமாக நெல் விளைச்சலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதன் அளவு எவ்வளவு;

(iii) செலவு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கமைய, இவ்வுற்பத்தி அதிகரிப்பு போதியதாகக் காணப்படுகின்றதா;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் சரியான முறையில் நடைபெறவில்லை என விவசாயிகள் குற்றஞ்சாட்டுவதால், இவ்வபிவிருத்தி வேலைகள் தொடர்பாக பின்னாய்வு செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை;

(iii) இன்றேல், இவ்வபிவிருத்தி வேலைகள் தொடர்பாக பின்னாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

7.

1681/ ' 17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு பார் வெளிச்சவீடு சந்தியிலிருந்து கல்குடா வரை கடற்கரை ஓரமாக மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதிக்கு சமாந்தரமான வீதியொன்று ஏறாவூர் வரை பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இந்த வீதிக்கு அருகாமையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகம் மற்றும் சில ஏனைய நிறுவனங்களும் நிர்மாணிக்கப்பட்டு வருவதனால், மட்டக்களப்பு – வாழைச்சேனை வீதியில் உள்ள போக்குவரத்து நெரிசலை இந்த வீதி இலகுவாக்கி, பொதுமக்களுக்கு வசதியாகவுள்ளது என்பதையும்;

(iii) இந்த வீதியில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கரையோரமாக பாசிக்குடா வரை பயணிப்பதற்கு இலகுவாகவும், வசதியாகவுமுள்ளது என்பதையும்

(iv) ஆழ்கடல் மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கைகளை இலகுவாக்குவதற்கு இது வசதியாகவுள்ளதென்பதையும்;

(v) திராய்மடு கிராமத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட குடியிருப்பாளர்கள் நன்மையடைவர் என்பதையும்; அத்துடன்

(vi) இந்த வீதி வழியே சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டல்களையும் ஏனைய தாபனங்களையும் நிர்மாணிப்பதற்கு இது முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்சொன்ன தகவல்களையும் தேவைகளையும் கருத்திற்கொண்டு இந்த வீதியின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் முன்கூட்டியே வழங்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

8.

893/ '16

கௌரவ புத்திக்க பத்திரண,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தின், பாணம கிராமத்தில் வசிக்கும் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மிகவும் சகவாழ்வுடன் வசிக்கின்றார்கள் என்பதையும்;

(ii) இம்மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாணம பிரதேச மக்களின் தண்ணீர், காணி சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி மக்களின் கலாசார தனித்துவங்கள் மற்றும் பாரம்பரிய உரிமைகளை பேணி வாழ்வதற்கு அரசாங்கம் அனுசரணை வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், எவ்வாறு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

1125/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் கீழ், 2010ஆம் ஆண்டு முதல் இற்றைவரை பதுளை மாவட்டத்தினுள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பஸ் தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள பஸ் தரிப்பு நிலையங்களின் பெயர்கள் யாவை;

(iii) ஒவ்வொரு பஸ் தரிப்பு நிலையத்துக்கும் செலவிடப்பட்டுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

(iv) கருத்திட்டத்தினுள் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டத்தின் ஏனைய பஸ் தரிப்பு நிலையங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1270/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனவரி 08 ஆம் திகதிக்கு முன்னர் மொனராகலை மாவட்டத்தின் ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலக மட்டத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாகிய ஆசிரியர்கள் இருந்தார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்படும் ஆட்களுக்கு பழிவாங்கலுடன் தொடர்புடையதாக விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அந்த ஆவணத்தின் முழுமையான அறிக்கையொன்றை இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1394/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 167 ஆம் இலக்க முன்மொழிவின்படி, ரூபா 50 மில்லியன் நிதியைப் பயன்படுத்தி கறுவா அபிவிருத்தி அதிகாரசபையொன்று தாபிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தாபிக்கப்பட்ட திகதி மற்றும் இடம் யாதென்பதையும்;

(iii) கறுவா அபிவிருத்தி அதிகாரசபையொன்று தாபிக்கப்படுவதற்கான காலத்தின் தேவை யாதென்பதையும்;

(iv) கறுவா அபிவிருத்தி அதிகாரசபையொன்றை தாபித்தலுடன் தொடர்புடைய திட்டங்களை வகுப்பதற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சு யாதென்பதையும்;

(v) மேற்படி அமைச்சு வரவு செலவுத் திட்ட முன்மொழிவினை யதார்த்தமாக்கிக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் கடைப்பிடித்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம், உத்தேச கறுவா அபிவிருத்தி அதிகாரசபையை முன்னெடுத்துச் செல்வதற்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1510/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மற்றும் மனித படுகொலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பீட்டளவில், 2016 ஆம் ஆண்டில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மற்றும் மனித படுகொலைகள் எவ்வளவு எண்ணிக்கையால் அதிகரித்துள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1549/ ’17

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிண்ணியா, எழிலரங்கு விளையாட்டு மைதானம் கடந்த சில வருடங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) அதன் அபிவிருத்தி பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(iii) அதனூடாக செயற்படுத்தப்படுகின்ற பணிகள் யாவையென்பதையும்;

(iv) அங்கே இருக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் அறிந்திருக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) எழிலரங்கு விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) அதன் மூலமாக செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திப் பணிகள் யாவையென்பதையும்;

(iii) திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் கிழக்கு மாகாண சபை அறியாத வகையில் அமைச்சு நேரடியாகவே மேற்படி அபிவிருத்தி பணிகளை செயற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கின்ற ஒப்பந்தகாரர் யாரென்பதையும்;

(v) மேற்படி ஒப்பந்தகாரருக்கு வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(vi) நீண்ட காலமாகியுள்ள போதிலும், அபிவிருத்திப் பணிகள் இன்னமுமே பூர்த்தி செய்யப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் வெளிப்படைத்தன்மை காணப்படுவதை உறுதிப்படுத்துவாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14.

1686/ ’17

கௌரவ அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து தேசியப் பாடசாலைகளின் பெயர்களையும்;

(ii) ஒவ்வொரு தேசியப் பாடசாலையிலுமுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அவர்களின் தரவாரியாகவும்;

(iii) ஒவ்வொரு தேசியப் பாடசாலையிலுமுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையை அவர்களின் வகுதி வாரியாகவும்;

(iv) ஒவ்வொரு தேசியப் பாடசாலையிலுமுள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் பதவியணியை பாடவாரியாகவும்;

(v) ஒவ்வொரு தேசியப் பாடசாலையிலுமுள்ள ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கையை அவற்றின் வகுதிவாரியாகவும்;

(vi) ஒவ்வொரு தேசியப் பாடசாலையிலுமுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் பாடங்களின் பெயர்களையும்; அத்துடன்

(vii) தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் மற்றும் மொழி ஆய்வுகூடங்கள் ஆகிய வசதிகள் வழங்கப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகளின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அவர் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும்;அத்துடன்

(ii) மேற்சொன்ன வெற்றிடங்கள் நிரப்பப்படும் திகதியையும்

அவர் இச்சபைக்கு மேலும் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

15.

1049/ ’16

கௌரவ புத்திக்க பத்திரண,— மாநகரசபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் கட்டிடங்களில் பேணிவரப்படுகின்ற அமைச்சுக்கள் யாவை என்பதையும்;

(ii) இவ்வமைச்சுக்கள் பேணிவரப்படும் கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்கட்டிடங்களில் ஒரு சதுர அடிக்கு செலுத்தப்படும் குத்தகைத் தொகை மற்றும் சேவைக் கட்டணம், ஒவ்வொரு கட்டிடத்திற்கு அமைவாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) இக்கட்டிடங்களில் வாகனங்களை நிறுத்திவைப்பதற்காக உள்ள இடப்பரப்புக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்தில் அமைந்துள்ள அமைச்சுக்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேக்கு கொண்டு செல்லப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்குத் தேவையான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(iii) கொழும்பு மாநகரசபை ஆளுகை பிரதேசத்திலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுரவிற்கு கொண்டு செல்லப்படும் மற்றும் கொண்டு செல்லப்படாத அமைச்சக்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

* 1.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— இலங்கையில் துரிதமாக அதிகரித்து வருகின்ற குற்றங்களைத் தடுத்தல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்த்தல் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

இலங்கையில் அதிகரித்து வருகின்ற குற்றங்களை தடுத்தல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்த்தல் என்பன இந்நாட்டு மக்களின் முதன்மையான தேவையாக மாறியுள்ளதாலும்,

அது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி தீர்வு காண்பதற்கான பொறுப்பு இப் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும்,

பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தகுந்த விதப்புரைகளை சமர்ப்பிக்கும் பொருட்டு பாராளுமன்ற தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

(அ) கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றங்களின் இயல்பு, அவ்வாறு குற்றங்கள் இடம்பெறுவதற்கு ஏதுவாயமைந்த விடயங்கள், குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தேவையான சட்ட ஏற்பாடுகள் மற்றும்/அல்லது திருத்தங்கள்,

(ஆ) குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு பின்பற்ற வேண்டிய பொருத்தமான நடைமுறைகள் மற்றும் புதிதாக விதிக்கப்பட வேண்டிய மற்றும்/அல்லது திருத்தங்களுக்குட்பட வேண்டிய சட்ட விதிகள் யாவை என்பதை விதந்துரைத்தல், மற்றும்

(இ) மேற்படி விடயங்களுக்கு இடைநேர்விளைவான மற்றும் குறித்த சந்தர்ப்பங்களின் போது அவசியமானதெனவும் பொருத்தமானதெனவும் குழு கருதுகின்றதும் குழுவினால் பரிசீலனை செய்யப்படுகின்ற விடயங்களுக்கு தாக்கம் செலுத்துகின்றதுமான வேறு விடயங்கள்,

2. (அ) மேற்படி குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 95 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு இருபத்தொரு (21) உறுப்பினர்களை விஞ்சாத எண்ணிக்கையை கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை தீர்மானிப்பதற்கு;

(ஆ) ஆட்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கு, பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழு முன்னிலையில் தோன்றுமாறு எந்தவொரு ஆளுக்கும் கட்டளையிடுவதற்கு, அத்தகைய ஆட்கள் வசம் அல்லது கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற ஏதேனும் கடிதம், புத்தகம், அறிக்கை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கு;

(இ) சாட்சியாளர்களை வாய்மொழி மூல விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் உண்மைத்தன்மையினை விசாரித்தறிவதற்கு அல்லது வேறு விதத்தில் உறுதி செய்து கொள்வதற்கு, குழுவின் தவிசாளர் அல்லது குறித்த பணிக்காக விசேடமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஆளொருவரால் உறுதிப்பிரமாணம்/ சத்தியப்பிரமாணம் பெறப்பட்ட சாட்சியாளர்களை விசாரிப்பதற்கு;

(ஈ) குழுவுக்கு உதவி புரிவதற்கென ஏற்புடைய துறைகளின் வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுவதற்கு; மற்றும்

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு, அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து கூட்டங்களை நடாத்திச் செல்வதற்கு;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

4. குழுவானது, தனது முதலாவது கூட்டம் நடத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தினால் தொடர்ந்தும் வழங்கப்படும் வேறு எந்தவொரு காலகட்டத்தினுள்ளும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பா. 166/ ’15

2.

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ விஜித பேருகொட

கௌரவ கஞ்சன விஜேசேகர

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ டி.வீ. சானக

கௌரவ திலும் அமுணுகம

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கனக ஹேரத்

கௌரவ தேனுக விதானகமகே

கௌரவ குமார வெல்கம

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— நிதியமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையின்மை,— அரசியலமைப்பின் 148 வது உறுப்புரைக்கிணங்க, பாராளுமன்றமானது பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாடு உடையதாகவிருத்தல் வேண்டுமென்பதனாலும்;

அரச நிதி முகாமைத்துவத்தின் பிரதானமான கருவியாக அமைவது வருடாந்த வரவு செலவுத் திட்டமாகுமென்பதனாலும்;

ஒதுக்கீட்டுச் சட்டமென்ற வகையில் இந்த உயர்சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற வரவு செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய நிதிப் பெறுமதிகளை மிகவும் விபரமாகவும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், உச்ச அளவிலான நம்பிக்கையை பாதுகாக்கும் வகையிலும், உண்மையாகவும் சமர்ப்பிக்கவேண்டியது நிதியமைச்சரின் பிரதானமான கடமையும் பொறுப்புமாகுமென்பதனாலும்;

நிதியமைச்சர் கௌரவ ரவி கருணாநாயக்க பாராளுமன்றத்தையும் பொதுமக்களையும் தவறாக வழிநடத்துகின்ற மோசடியான தவறாக எடுத்துக்காட்டுகின்ற வரவு செலவுத் திட்டமொன்றை இத்தடவை (2016) இந்த உயர்சபைக்குச் சமர்ப்பித்துள்ளதனாலும்;

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவம் (பொறுப்புகள்) சட்டத்தின் 13 ஆம் வாசகத்தின்படி நிதி அமைச்சரால் இவ்வுயர்சபைக்கு 2015 ஏப்பிரல் 20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையின் 85 ஆம் பக்கத்தில் “சாதாரண கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகிய துறைகளுக்கான முழுமொத்த முதலீடு ரூபா 164 பில்லியனாக இருப்பதுடன், இது 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ரூபா 157 பில்லியன் முதலீட்டை விட ரூபா 7 பில்லியன் அதிகரிப்பாகும்” என்பதனாலும்;

"சாதாரண கல்விக்காக 2014 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட அரச முதலீடு ரூபா 117 பில்லியனாக இருப்பதுடன், இது 2013 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ரூபா 108 பில்லியன் முதலீட்டை விட 8% அதிகரிப்பாகும்" என்பதனாலும்;

2016 வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் ii ஆம் தொகுதியில் 218 மற்றும் 219 ஆம் பக்கங்களின்படி 2015 ஆம் ஆண்டில் சாதாரண கல்விக்கான மூலதனச் செலவினம் ரூபா 17.8 பில்லியனில் இருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 18.3 பில்லியன் வரை சுமார் ரூபா 0.5 பில்லியனால் மிகச் சிறிதளவு அதிகரித்துள்ளதனாலும்;

இலங்கை வரவு செலவுத்திட்ட வரலாற்றில் அசாதாரணமான மற்றும் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் 2016 ஆம் ஆண்டில் சாதாரண கல்விக்கான மீண்டுவரும் செலவினம் 278% ஆல் (2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 44 பில்லியனிலிருந்து ரூபா 167 பில்லியன் வரை ரூபா 123 பில்லியனால்) ரொக்கட் வேகத்தில் அசாதாரணமான விதத்தில் அதிகரித்துள்ளதனாலும்;

இவ்வாறு அசாதாரணமான மற்றும் வியத்தகு விதத்தில் மீண்டுவரும் செலவினம் அதிகரிப்பதற்கு, சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் எந்தவொரு வரவுசெலவுத் திட்டத்திலும் குறிப்பிடப்படாதிருந்த "அரசாங்க முதலீடுகளை பேணிவருவதற்கான செலவு - காணி மற்றும் கட்டிடங்கள்" என ரூபா 121,352 மில்லியன் அல்லது ரூபா 121 பில்லியன் கணக்குக் குறிப்பொன்று காணப்படுகின்றமையே பிரதான காரணமாவதனாலும்;

இது மீண்டுவரும் செலவினமாக காட்டப்பட்டுள்ள போதிலும் உண்மையிலேயே 2016 ஆம் ஆண்டில் செலவிடப்படும் பணத் தொகையல்ல என்பதனாலும்;

2016 ஆம் ஆண்டில் கல்விக்காக செலவிடப்படாத ரூபா 1210 கோடிக்கும் அதிகமான பணத் தொகை மீண்டுவரும் செலவாக குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் கல்வி அமைச்சின் செலவினத் தலைப்பு போலியான விதத்தில் "பெரிதாகக் காட்டப்பட்டு" இவ்வுயரிய சபைக்கு பொய்யான தகவல்கள் மற்றும் தரவுகளை சமர்ப்பித்துள்ளதன் மூலம் சபையின் நம்பிக்கையை முற்றாக இழந்துள்ளதனாலும்;

தொடர்ந்தும் நிதி அமைச்சர் அப்பதவியில் பணியாற்றுகின்ற இயலுமை பற்றிய நம்பிக்கையை இழந்துள்ளாரென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.